www.padippakam.com

# தாமரை



மார்ச் - '96

விலை ரூ. 4/-

படிப்பகம்

www.padippakam.com

தாமரை

வாசகர்களே...

*முற்றிலும் புதிய வடிவமைப்பில்,*
*அருமையான படைப்பிலக்கியப்*
*பெட்டகமாக வெளிவருகிறது.*
*'தாமரை'க்கு இன்றைய நிலையில் நிறையப்*
*பணம் தேவைப்படும் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.*
*எனவே 'தாமரை' இதழுக்காக சந்தா சேர்க்கும்*
*இயக்கத்தைத் தொடங்குங்கள். அத்தோடு*
*விளம்பரங்களையும் சேர்த்து அனுப்புங்கள்.*

---

***சந்தா விபரம்:***

| | |
|---|---|
| தனிப்பிரதி | 4 ரூபாய் |
| ஆண்டுச் சந்தா | 45 ரூபாய் |

***விளம்பர விகிதம்:***

| | ரூபாய் |
|---|---|
| பின் அட்டை | 3,000.00 |
| உள்அட்டை | 2,000.00 |
| ஒரு பக்கம் | 1,000.00 |
| அரைப்பக்கம் | 500.00 |
| கால்பக்கம் | 300.00 |

*முகவரி:* **தாமரை 'நிர்வாகி'**

***''பாலன் இல்லம்'', தி.நகர், சென்னை 600 017.***

www.padippakam.com

கலையின் லட்சியம், வாழ்வின் லட்சியம், ஒவ்வொரு மனிதனிலும் உலகிலும் உள்ள சுதந்திரம் -பொறுப்புணர்வு ஆகியவற்றின் அளவை அதிகமாக்குதல் மட்டும்தான்

தற்காலிகமாகக்கூட, எத்தகைய சூழ்நிலையிலும், சுதந்திரத்தைக் குறைப்பதோ நசுக்குவதோ லட்சியமாகாது.



ஒரோர் வரையிலான புற நியதிகளுக்கு மனிதனை, உடன்படவும், மாற்றவும் முனைகிற கலைப் படைப்புகளும் இருக்கத் தான் செய்கின்றன. இதே போல் அவனுள்ளே இருப்பவற்றுள் கீழ்மையான மனோபாவங்களுக்கு, அச்சத்துக்கு, துவேஷத்துக்கு அவனை ஆட்படுத்தும் படைப் புகளும் உள்ளன. என்னைப் பொறுத்த வரை அத்த கைய படைப்புகள் மதிப்புக்கு உரியவையல்ல.

எந்த உன்னத படைப்பும் துவேஷத்திலோ வெறுப்புக்களிலோ இருந்து பிறந்ததில்லை, இதற்கு மாறாக எந்த ஒரு உன்னத படைப்பும் அதனை உணர்ந்து அனுபவித்த ஒவ்வொருவரது அகச்சுதந்திரத்தைப் போஷித்து அதிகரிக்கவே உதவியுள்ளது.

ஆம், அந்த சுதந்திரத்தையே போற்றுகிறேன். அதுதான் நான் வாழ உதவுகிறது. ஒரு கலைஞனது வாழ்வில் வெற்றி தோல்வி இருக்கலாம். எனினும், தனது நீண்ட உழைப்புக்களின் விளைவாக மனிதர்கள் மீது அழுத்தும் பல்வேறுவிதமான தளைகளை அந்தக் கலைஞன் தளர்வுறச் செய்தோ குறைத்தோ உள்ளதாக அவனால் காண முடியுமேயானால், ஒருவகையில் அவன் நியாயமடைகிறான். ஒரு அளவுக்கு அவன் தன்னைத்தானே மன்னித்தவனுமாகிறான்.

-ஆல்ஃபெர் காம்யூ.

தமிழில். எஸ். பாலச்சந்திரன்

படிப்பகம்

www.padippakam.com

## நம்பிக்கை வைத்து

நேர்மை என்ற சொல்லை கடித்து குதறி உருதெரியாமலாக்குவதில் நாட்டை ஆளும் சக்திகள், அரசியல் கட்சியின் ஆதிக்க வட்டங்கள், அதிகார வர்க்கம், நிதி மோசடி தரகர்கள், குற்றம் புரிவதை தொழிலாக கொண்ட கீழுலகவாசிகள் -என்ற வலுவான கூட்டணியின் விரல் நுனியில் இந்தியா.

எத்தனையோ வண்ணங்களில் அரசியல் கட்சிகளின் கொடிகள், கொள்கைகள், தேர்தல் கால கூட்டணிகள் ஜனநாயகத்தை வெகுவாக மேடைகளில் பேசினாலும், கட்சிகளை செயல்படுத்தும் பொத்தான்கள் இந்த தேச விரோத போட்டி உலகின் கையில் தான்.

இந்த மோசடி மிகுந்த உலகில் சிக்கிக் கொள்ளாமல் - எஞ்சியிருப்பது கம்யூனிஸ்டுகள் மட்டும் . இந்த பெருமை மட்டுமே போராட்ட சக்திகளுக்கு போதுமானதாக இல்லை. தேசமே கொள்ளை போகும் போது, திருட்டில் எனக்கு எந்த சம்மந்தமும் இல்லை என்ற பெருமை பயனற்றது. அதை தடுக்கும் வல்லமையை பெற வேண்டும்.

அரசு இயந்திரத்தின் பாதுகாப்பில், துப்பாக்கிகள் புடைசூழ, மோசடியில் பணம் சேர்ந்த கும்பலின் அரவணைப்பில் இருந்துகொண்டு, பொது மக்களிடம்

**தாமரை**

*மலர்: 37*

*இதழ்: 7*

*மார்ச் '96*

*19, செவாலியே சிவாஜி கணேசன் சாலை, தியாகராயர் சாலை, சென்னை- 600 017*

படிப்பகம்

www.padippakam.com



# நெம்புகோல் எடுத்து

ஒருவித மிரட்டலில் ஆதிக்கம் செலுத்தப் பார்க்கிறது இந்த கும்பல் ஆனால் உண் மையை தேடிப்புறப்பட்டால், விடை மிகுந்த வியப்பை தருகிறது. அவ்வளவும் வெறும் அட்டைகளால் செய்யப்பட்டு, வண்ண அலங்காரங்களில் பளிச்சிடும் கட் அவுட். அவ்வளவுதான். ஜன சமுத்திரத்திலிருந்து எழும் சிறிய காற்றை கூட தாக்குப்பிடிக்கும் சக்தி இதற்கில்லை. பெரும் புயல் எழுமானால்,....... சிந்தித் துப் பார்ப்பதில்தான் எல்லாமும் அடங்கி யிருக்கிறது.

இன்று தேவை கூட்டுறவு. மக்களின் ஒற்றுமை. அநியாயங்களை அகற்ற பரந்துபட்ட அணி. மாற்றங்களை எல்லாம் உருவாக்கி காட்டிய மக்கள், புதிய மாற்றங்களை செய்து முடிக்க எப்படி தயக்கம் காட்டுவார்கள்? அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

சமுதாயத்தின் எல்லா ஆரோக்கி யமான பகுதியும் இணைந்து, இந்த புனிதப் பணியை செய்து முடிக்க வேண்டும்.

நம்பிக்கை வைத்து, நெம்புகோல் எடுத்து நடப்போம் வாருங்கள் -என்ற கவிஞர் பரிணாமன் பாடல்கள் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

**தாமரை**

நிறுவக ஆசிரியர்
**ப.ஜீவானந்தம்**

ஆசிரியர்
**ப.மாணிக்கம்**

பொறுப்பாசிரியர்
**சி.மகேந்திரன்**

படிப்பகம்

www.padippakam.com

# தற்கொலை கோழைத்தனம்

## பகத்சிங்

'தற்கொலை கடுங்கொடிய குற்றம்' என்று நீர் முன்பு கொண்டிருந்த கருத்தே இன்றும் என் கருத்தாக உள்ளது. ஆம்; முழுமையான கோழைத்தனத்தின்



செயலே தற்கொலை; இது வீரஞ்செறிந்த புரட்சியாளர்களுக்கு இசைவானதல்ல.

(வழக்கு விசாரணை முடிந்து விட்டது; எந்த நாளிலும் தீர்ப்பு அளிக்கப்படலாம். சுசுதேவ் தனக்கு 'நாடு கடத்தல் தண்டனை' கிடைக்குமென எதிர்பார்க்கிறான். மேலும் 20 வருடங்கள் சிறையில் கழிக்க அவனுக்கு இசைவில்லை. குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டால், தான் தற்கொலை செய்து கொள்ளப் போவதாய் அவன் பகத்சிங்கிற்கு கடிதம் மூலம் அறிவிக்கிறான். விடுதலை அல்லது மரணம் இதுவே அவன் நிலைப்பாடும். இடையில் வேறு கருத்திற்கு இடமில்லை. ஆனால் சுகதேவின் முடிவை அறிந்த

www.padippakam.com



பகத்சிங் கொண்ட அக எதிரியக்கம் வலுவானது. செயலாற்றுதல், துன்புறுதல், போராட்ட நோக்கங்களுக்காக வாழ்தல் - இவையே பகத்சிங்கின் நிலைப்பாடாக இருந்தது. அவர் 'கஷ்டங்களிலிருந்து தப்பித்தல் கோழைச் செயல்' என்றார். இந்தக் கடிதம் ஒரு கொள்கைத் தியாகி கொண்டுள்ள திடச்சித்தத்தை நாமறிய வாய்ப்பளிக்கும் மேலு மொரு சாளரமாக திகழ்கிறது.)

அன்புச் சகோதரனே,நான் உன் கடிதத்தில் ஆழ்ந்து அதைப் பல முறை படித்துவிட்டேன். தற்போது ஏற்பட்டுள்ள 'சூழ்நிலை மாற்றங்கள்' நம் இரு வரையும் வெவ்வேறு விதமாய் பாதித் துள்ளதை நான் உணர்கி றேன். வெளியில் எவையெல் லாம் உன் வெறுப்புக்கு ஆளானதோ அவை இப்போது உனக்கு 'அவசியமாகி' விட்டன. இதைப் போலவே எவற்றிற் கெல்லாம் என் பலத்த ஆதரவை அளித்து வந்தேனோ அவை யெல்லாம் இனி எனக்கு எவ்வித தனிச்சிறப்பையும் தரப் போவதில்லை.

உதாரணம் சொல்வதானால், முன்னர் நான் சுயநேசிப்பில் நம்பிக்கை கொண்டிருந்தேன். ஆனால் இப்போதந்த உணர்வு எந்த நிலையிலும் என் இதயத்திலோ சிந்தனையிலோ இடங்கொள்ளாமல் முடிவெய்தி விட்டது. வெளியிலிருந்தபோது நீயும் அதை கடுமையாய் எதிர்க்கவே செய்தாய். இன்றோ உன் கருத்துக்களில் முனைப்பான பல மாறுதல்கள் நிகழ்ந்து மூலத் தத்துவத்ததின் தீவிரம் குறைந்து போய் அவை சுருங்கிய உன் சுயநேசிப்பின் மீதே குவிந்துள்ளன.

மனித உயிர் வாழ்விற்கு சுயநேசம் பிரதானப் பங்காற் றுவதை அனுபவித்து வருகிறாய். அந்த அனுபவம் குறித்த சந்தோசத்தை நீ கண்டிருக்கிறாய் அப்போதும் ஒருநாள் தற்கொலை பற்றி உன்னிடம் நான் விவாதித்ததை நீ ஞாபகப்படுத்திக் கொள்ளலாம். சில சூழ்நிலைகளில் தற்கொலைஅங்கீகரிப்புக்குரியதே என்றேன் நான். ஆனால் நீ என் கருத்தை கோபங்கொண்டு எதிர்த்தாய். விவாதம் நடந்த அந்த நேரமும் இடமும் இப்போது என் நினைவில் ஒளிர்கின்றன. ஒரு மாலைப் பொழுதில், 'சகன்சகி குதியா'- வில் நாம் தற்கொலை பற்றி விவாதித்தோம்.

''தற்கொலை கோழைத்தன மான செயல்; எப்போதும் அதை சரியென்று ஏற்க முடியாது; இவ்வகைச் செயல்கள் அச்சந்தரக் கூடியவை; கொடியதிலும் கொடியவை'' என்றாய். ஆனால் அன்று பேசியவற்றிற்கு எதிர் முரணான நிலையில் நீயிருப்ப தையே இப்போது நான் காண் கிறேன். 'நெருக்கடி மிக்க சூழமைவில் தற்கொலையே சரியான முடிவு' என்பதோட்டன்றி

www.padippakam.com



'அது தவிர்க்க முடியாதது; கட்டாயத் தேவையுங்கூட' என்றெல்லாம் சொல்லும் அவல நிலைக்கு வந்துவிட்டாய்.

மாறாக, 'தற்கொலை கடுங்கொடியக் குற்றம்' என்று நீ முன்பு கொண்டிருந்த கருத்தே இன்றும் என் கருத்தாக உள்ளது. ஆம்; முழுமையான கோழைத் தனத்தின் செயலே தற்கொலை; இது வீரஞ்செறிந்த புரட்சியா ளர்களுக்கு இசைவானதல்ல: வேறு யாரை அணுகி



கேட்டாலுங்கூட தற்கொலைக்கு எந்த ஒரு தனிமனிதனும் நியாயம் கற்பிக்க மாட்டான்.

நாட்டுக்குத் தனியனாய் உழைத்தல் எப்படிப்பட்ட சிரமங்களையெல்லாம் ஏற்க வேண்டிய பணிஎன்பதை அறியத் தவிறியதாய் நீ கூறுகிறாய். உன்னைப்போன்றோர் இப்படிச் சொல்வது உண்மையில் திகைப் பூட்டவே செய்கிறது. ஏனென் றால் பணியாற்றுவதன் வாயிலாய் துன்பங்களையும் தியாகங்க ளையும் ஏற்றல் என்கிற 'நவ்ஜவான் பாரத்சபா'வின் உயரிய லட்சியத்தை நாம் எவ்வ ளவு கனவுகளுடன் நேசித்தோம்! உன்னால் இயன்ற அளவிற்கு பங்காற்றினாய் என்பதை நான் நம்புகிறேன். அதன் பொருட்டு துன்புற வேண்டிய நேரமே இது. கொடுந்துன்பங்களை ஏற்பதன் மூலம் அனைத்து மக்களையும் நம் இலக்கை நோக்கி வழிநடத்த வேண்டிய தருணமும் இதுவே.

செய்யப்போகும் செயலில் தன்னை ஒப்புவித்தப் பின்னரே ஒருவன் அச்செயலிலீடுபட வேண்டும். அவ்விதமே பாராளு மன்றச் சபையில் நாம் குண்டு வீசினோம். அதன் பின் வரும் விளைவுகளனைத்தையும் சகித் தேற்க வேண்டிய நேரமிது. இரக்கத்திற்காய் கெஞ்சி தண்ட னையைத் தவிர்க்க நாம் முயன்றிருந்தால் நமது செயல் 'மெத்த சரி'யெனப் புகழப்பட்டி ருக்கும் என்றா நினைக்கிறாய்? இல்லை; அவ்வாறு நிகழ்ந் திருப்பின் நம் குறிக்கோள்களுக்கு முற்றிலும் எதிரான விளைவுகளே மக்களிடையே எழுந்திருக்கும். ஆனால் இன்று நம்பெரும் முயற்சி முழு நிறைவான வெற்றியை எய்தியிருக்கிறது.

சிறையிலிருக்கும் வேளையில் நமது கட்சி சார்ந்த அரசியல் கைதிகள் அனைவரும் கடைப் பிடிக்கும் விதிமு றைகள் துயரஞ்

www.padippakam.com



செறிந்தவை. எனினும் கட்சி விதிகளை பின்பற்றும் நிலையுறுதிப்பாட்டில் மேலும் மேலும் வலிமை சேர்ப்போம். நாம் நம்புவதைப் போலவே வெகு சீக்கிரமே நாம் சாகப் போகிறோம் என்பதை வெளிப்படையாகவே உனக்கு சொல்லிக்கொள்கிறேன். நமக்கு கட்டாய உணவூட்டும் நடவடிக்கை மேற் கொள்ளப் படுவதை எதிர்த்தாலும் சரி; எப்போதும் உணவை மறந்திருந் தாலும் சரி; நாம் எந்த நேரத்திலும் சாகத்தயாராக இருக்க வேண்டும்.

நாம் தற்கொலை செய்து கொள்ள நிர்பந்திக்கப்படுகிறோம் என்றா சொல்கிறாய்? இல்லை; ஒரு உயர்ந்த உன்னத லட்சியத்திற்காக விருப்பத்தோடு வருந்தி செயலாற்றி அதில் தன் வாழ்வையே தியாகம் செய்பவனின் மரணத்தை தற்கொலை யென்று சொல்லவே முடியாது. 'யத்திந்ர தாஸின்' சாவில் நாம் பொறாமை கொண்டிருக்கிறோம். அவரின் மரணம் ஒரு தற்கொலை என்றா நீ சொல்வாய்? இறுதி முத்தாய்ப் பாய் சொல்வதெனில், துயரங் கள் நமக்கு சலிப்பூட்டும் இன் சுவைக் கனிகளே.

நாடு முழுவதும் ஒரு மாபெரும் இயக்கம் தொடங்கப்பட் டிருக்கிறது. நமது லட்சியப் பணியில் நாம் வாகை சூடியிருக்கிறோம். போராட்டங்களில் நேரும் மரணம் 'இலட்சிய மரணமே'. ஆகவே, மரணத்தால் புகழெய்துவோம் என்று நம்புகிற நம் தோழர்கள் அனைவருமே தூக்கிலிடும் ஆணை பிறப்பிக்கப்படுகிற நாளுக்காக பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். இவ்விதம் நிகழும் மரணமே அழகானதாகும். ஆனால் சில கஷ்டங்களிலிருந்து நீங்க வேண்டி தற்கொலையில் வாழ்வை சட்டென்று முடித்துக் கொள்ளுதல் பயங்கொள்ளிச் செயலே ஆகும். துன்பத் துயரங்களும், இடையூறும் இடைஞ்சல்களுமே ஒரு முழு நிறைவான மனிதனை உருவாக்கும் என்பதை உனக்கு சொல்ல விரும்புகிறேன். நீயோ, நானோ அல்லது நம்பில் யாருமே இதுவரை எவ்விதத் துன்பங் களையும் அனுபவிக்கவில்லை. நம்து துயர வாழ்வு இப்போது தான் ஆரம்பித்திருக்கிறது.

ருஷ்ய இலக்கியத்தில் பிரதி பலிக்கும் வாழ்வின் யதார்த்தம் பற்றி நாம் பலமுறை பேசிக் கொண்டதை மீண்டும் நினைவில் கொள். அந்த யதார்த்தத்தின் கொடூரம் நமது சொந்த வாழ்வில் எங்குமே நிலவவில்லை. ருஷ்யக் கதைகளில் நிலவும் சோகச் சூழமைவுகளைப் படித்து பாராட்டினோம். ஆனால் அவற்றுள் பொதிந்துள்ள மெய்க் கருத்தை நாம் உணரவில்லை. அக் கதாப்பாத்திரங்களின் உணர் வெழுச்சியையும், அவற்றின் பிரமாண்டத் தன்மைகளையும் நாம் புகழ்ந்தோம். ஆனால்

www.padippakam.com



அதற்கான காரணங்களைத்தேட சிறிதும் முயலவில்லை; அவர்கள் சகல கஷ்டங்களையும் அனுபவித் தார்கள்.அவற்றை சகித்தேற்பதில் காட்டிய மனத்துணிவு அவர்க ளின் ஆற்றலை செறிவுப்படுத்தி அவர்களை சக்தி மிக்கவர்களாக் கியது. இந்த அம்சங்களே கதாப்பாத்திர சிருஷ்டிப்பின் பிரமாண்டத் தன்மைகளுக்கும் ருஷ்ய இலக்கியச் சிறப்பிற்கும் காரணங்களாயிருந்தன. அவற் றைப் படிக்கும் போதும்



இவ்வாறே நான் உணர்ந்தேன்.

எவ்வித இயல்பான அனுபவப் பூர்வமான அடிப்படையில் இயங்காமல், பகுத்தறிவிற்கு ஒவ்வாதப் பண்புகளை நம் வாழ்வு உள்ளீர்க்கும் போது, நாம் இரக்கத்திற்கும், கேலிக்கும் உரியவர்களாகிறோம்.

புரட்சியாளர்களாய் வாழ்வதில் கர்வம் கொண்டுள்ள நம் போன்றவர்கள் எல்லாவித கஷ்ட நிஷ்டூரங்களையும், கவலை களையும், வேதனைகளையும் மகிழ்ந்தேற்க எப்போதும் தயாராக இருக்கவேண்டும். அவ்வாறு ஏற்றுக் கொள்வதாலேயே நம்மை நாம் புரட்சி வீரர்களென்று அழைத்துக் கொள்கிறோம்.

சிறையில் மட்டுமே ஒருவ னுக்கு குற்றம் மற்றும் பாவம் பற்றியதான சமூக கண்ணோட் டங்களை புத்தகங்களாலும், அனுபவ ரீதியிலும் படித்தறிய பெரிதும் சந்தர்ப்பம் வாய்க்கிறது. அப்படி சில இலக்கியங்களை நான் படித்தேன். இது மாதிரியான சுயப்படிப்புக்கு சிறை மட்டுமே உகந்த இடம். ஒருவனது சுயப்படிப்பின் சிறப்பம்சம் அப் படிப்பில் அவனையே வருத்திக் கொள்வதில் அடங்கியுள்ளது.

ஜாராட்சி தூக்கியெறியப்பட்ட பிறகு, அரசியற் கைதிகளுக்கு மிகுந்த துன்பங்களைத் தந்த ருஷ்யச் சிறைகளின் குரூரச் சூழல் சிறையில் கிளர்ச்சி நிகழக் காரணமானது என்பதை நீ அறிவாய். இது பற்றி பிரக்ஞை யுள்ளவர்களும், சிறைக் கொடுமைகளை அனுபவிப் பவர்களும் தேவையான அள விற்கு இந்தியாவில் இல்லையா என்ன? கிளர்ச்சியை யாராவது செய்வார்கள் அல்லது அதை செய்ய வேறு பலர் இருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லுதல் ஏற்றதாய் இராது. ஆனால் இவ்வாறாய் தான் நேர்மையற்ற,

www.padippakam.com



வெறுக்கத் தக்க முறையில் மனிதர்கள் தமது புரட்சிகரப் பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைத்து, நிலவும் சமூக அமைப்பிற்கு எதிரான அவர்களின் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமென்று எதிர் பார்க்கிறார்கள். அவர்கள் இத்தகைய வழக்க முறைகளை மீறி காரிய மாற்றவேண்டும். அதே சமயம் நேர்மையை, ஒழுங்கை மனங்கொள்ள வேண்டும், ஏனெனில் தேவையற்ற, ஒழுங்கில்லாத முயற்சிகள் எதற்கும் பயனற்றவைகளாகவே முடியும். சிறப்பாக நடத்தப்பெறும் கிளர்ச்சிகள் புரட்சியின் நடைமுறைச் செயற்பாட்டை நிச்சயம் சுருக்கும்.

எல்லா இயக்க செயற்பாடுகளின் மீதும் பற்றின்றி உனக்குள்ளேயே ஒடுங்கிப் போனதற்காய் நீயளித்த காரணங்களை என்னால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. அறிவற்ற அல்லது தகவல் சரிவரப் பெறாத நமது நண்பர்கள் சிலருக்கு உன் நடத்தை முற்றிலும் அந்நியமான, புரிந்து கொள்ள முடியாத ஒன்றாகவே உள்ளது. (புரிவுணர்வுக்கு வெகுதூரம் அப்பாற்பட்ட ஒருவனாய் நீ இருப்பதால் உன் நடத்தைப் பற்றி எக்கருத்தும் கொள்ள முடியவில்லை யென அவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்கள்.)


உண்மையில் உனது சிறை வாழ்க்கை மிகக் கீழ்மையானதெனில், நீ ஏன் கிளர்ச்சி செய்யும் முயற்சிகளில் ஈடுபடவில்லை? ஒரு வேளை, அவ்வாறான போராட்டம் ஒரு வீண் என்று சொல்ல முனைவாய். அப்படி சொல்வதானால், உனது வாதம் இயக்க நடவடிக்கைகளில் பங்கு கொள்வதை தவிர்க்க எண்ணும் பலவீனர்களின் பாதுகாப்பு கவசமே ஆகும்.எனது பதில் இது தான்: இப்போது சிறையின் வெளியிலிருப்போர் புரட்சி இயக்கங்களில் 'சிக்கி'க் கொள்வதிலிருந்து தப்பித்துச் செல்வதில் பெருமார்வம் கொண்டிருப்பதை நாங்கள் கேள்விப்படுகிறோம். இதையே இந்த நேரத்தில் உன்னிடமிருந்தும் நான் கேள்விப்படவா? பரந்துவிரிந்த நமது குறிக்கோள்களுடனும் லட்சியங்களுடனும் ஒப்பிடுவதானால், சிறு எண்ணிக்கையிலிருக்கும் நம் கட்சியினரைக் கொண்டு எதைச் சாதிக்க முடியும்? ஒன்றாய் சேர்ந்து நமது வேலையை செய்து முடித்தது மாபெரும் தவறென்று இதிலிருந்து நாம் யூகிக்கலாமா? கூடாது; இது போன்ற யூகங்கள் தவறானவையே. அவ்வாறு நினைப்பது ஒருவனின் மன பலவீனத்தை காட்டுவதே ஆகும்.

நீ மேலும், "ஒருவன் வருட நெடிய சிறைவாசத்தை அனுபவித்தப் பிறகும் அவன்அதே கொள்கைப் பற்றோட இருப்பான்

www.padippakam.com



என்று எதிர்பார்க்க முடியாது; ஏனெனில் இக் கொடிய சிறை வாழ்க்கை அவனது எல்லா கருத்துருவங்களையும் நசித்து அழித்துவிடுகிறது'' என்று எழுதுகிறாய், இப்போது உன்னை ஒன்று கேட்க விரும்புகிறேன். சிறைக்கு வெளியில் நிலவும் சூழல் நமது எண்ணங்களுக்கு சிறிதளவாவது சாதகமாக உள்ளதா? இல்லையென்று ஆனபின்பும் நமது தோல்விகளின் பொருட்டு லட்சியப் பணியிலிருந்து



விலகியிருக்க நம்மால் இயலுமா? ''போராட்டக் களத்தில் நாம் அடியெடுத்து வைக்கவே இல்லை; எவ்வித புரட்சிகர செயலும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை'' என்று மறைபொருளாய் கூறவா விழைகிறாய்? அதுவே உன் வாதமெனில், நீ தவறிழைக்கிறாய். அது தான் உண்மை என்றாலுங்கூட சூழ்நிலையை ஓரளவாவது மாற்றியமைக்கும் பணியில் நாமும் உதவியாய் இருந்ததை நிருபித்து காட்டியிருக்கிறோம். எனினும், இக்காலத்தின் தேவைக்குரிய விளைபயன்தான் நாம். கம்யூனிசத்தின் தந்தை என்று புகழப்படும் மார்க்ஸ் உண்மையில் அத் தத்துவத்தை அவரே படைத்துருவாக்கவில்லை. ஐரோப்பாவின் தொழிற் புரட்சியே அது போன்ற கம்யூனிட்டுகளைத் தோற்றுவித்தது. மார்க்ஸ் அவர்களில் ஒருவரே. மார்க்சும் அவரது காலத்தின் சக்கரங்களை முடுக்கிவிடும் கருவியாம் செயல்பட்டு கணிசமான பங்கைச் செலுத்தினார் என்பதும் உண்மை. நான், ஏன் நீயுங்கூட, இந்த நாட்டில் பிறக்கும் போதே சோசலிச, கம்யூனிசக் கருத்துக்ளோடு பிறக்க வில்லை. காலமும், சூழ்நிலை மாற்றங்களும் நம்மில் ஏற்படுத்தும் தொடர் பாதிப்புகளின் விளைவாய்த் தான் அக்கருத்துக்கள் நம்மைப் பற்றுகின்றன. குறிப்பிட்ட அளவிற்கு அக்கருத்துக்கள் பரவச் செய்ததில் நமது பங்கும் சிறிது உண்டு. பெருஞ்சிரமத்துக்குரிய நம் வேலைகளை ஏற்கனவே மேற்கொண்டு செயலாற்றினோம் என்ற போதிலும் அவற்றை மேலு தொடர்ந்த உயரிய நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டும். கடுந் தொல் லைகளிலிருந்து தப்பிப்பதற்காக செய்யப்படும் நமது தற்கொலைகள் நிச்சயம் மக்களை முன்னோக்கி வழிநடத்தாது வேறு விதமாக சொல்வதானால் 'நம் தற்கொலை'

www.padippakam.com



முற்றிலும் எதிர்விளைவுகளையே எழுப்பும்.

ஏமாற்றங்களுக்கும், துயர்மிக்க நெருக்கடிகளுக்கும், சித்ரவதைகளுக்கும் நம்மை ஆட்படுத்தும் சிறை விதிகளின் கொடூர பரிசோதனைச் சூழலிலும் உறுதி குலையாமல் தொடர்ந்து நாம் செயலாற்றி வந்தோம். செயல் புரியும் வேளைகளில் பலவித சிக்கல் சிரமங்களுக்கு இலக்காகவும் நம்மை தயார்படுத்திக் கொண்டோம். பெரும் புரட்சியாளர்களாய் தங்களைப் பிரகடனப் படுத்திக் கொண்ட பலர் நம்மைவிட்டு நீங்கியோடி விட்டனர். விதிகளின் கொடிய தீவிரப் பரிசோதனைக்கு நாம் உள்ளாகவில்லையா? பிறகு, கிளர்ச்சி நடவடிக்கைகளை விடாது மேற் கொண்டிருப்பதற்காக வேறு தர்க்க காரணங்கள் என்ன?

இந்த வெளிப்படையானநாம் நடத்தும் விவாதம் நமது கருத்துக்களுக்கு வலிமை சேர்க்காதா, என்ன? மேலும், தமக்கு அளிக்கப் பட்ட குற்றத் தீர்ப்புகளால் சிறைகளில் சொல லொண்ணாத் துயரங்களை அனுபவித்து, சிறைமீண்டு வெளி வந்தப் பின்னும் தொடர்ந்து செயலாற்றி வரும் புரட்சியாளர்கள் பலர் நமது முன்னுதாரணங்களாய் இல்லையா, என்றால், உன்னைப் போன்றே 'பாகுனின்' வாதிட்டிருந்தால் வெகு தொடக்கத்திலேயே அவர் தற்கொலையில் வாழ்வை முடித்துக் கொண்டிருந்திருப்பார், ;சிறையிலேயே வாழ்ந்த போதிலும் கடமைகளாற்றிய எண்ணற்ற புரட்சியாளர்கள் இன்று ருஷ்ய அரசாங்கப் பதவிகளில் வீற்றிருப்பதை நீ காணலாம். மனிதன் அவனது நம்பிக்கைகளை இறுகப் பற்றிப் பிடித்திருக்க, கடும் முயற்சி கொண்டிருக்க வேண்டும். எதிர் காலத்தில் 'என்ன காத்திருக்கிறது' என்பதை யாராலும் சொல்ல முடியாது.

உனக்கு நினைவிருக்கிறதா? நமது வெடிகுண்டுத் தொழிற் சாலைகளில் எப்போதும் செறிவான, துரித செயல் விளைவுள்ள 'விஷமருந்தை' வைத்துக் கொள்வது பற்றி நாம் விவாதித்தோம். அப்போது கூட நீ 'கூடவே கூடாதென்று' கோபாவேசத்தோடு எதிர்த்தாய். அன்று நீ சொன்ன அந்த மிகச் சரியான கருத்து இன்று உன் மனத்தோடு ஒத்திசையாத ஒன்றாகிவிட்டது. உன் முன்னையக் கருத்தில் நீ நம்பிக்கை கொள்ளவில்லை. அப்படி என்ன நேர்ந்து விட்டது, இப்போது? கடுங்கஷ்டங்கள் செறிந்த சூழலை இன்னும் நாம் எதிர்கொள்ளாததை எண்ணும்போது நான் உனக்கெதிரான திடீர் உணர்வெழுச்சியைக் கொள்கிறேன். தற்கொலைக்கு அனுமதி தரும் உன் மனம்பான்மையைக் கூட நீ

www.padippakam.com



வெறுக்கிறாய். அன்போடு என்னை மன்னிப்பாயானால், ஒன்றை இங்கே சொல்கிறேன்: நீ சிறைபிடிக்கப்பட்ட நேரத்திலேயே தற்கொலையில் நம்பிக்கை வைத்து இறந்திருப்பாயானால், அச்செய்கை நம் புரட்சிக்குரிய நோக்கங்களுக்கு துணை புரிந்திருக்கும். ஆனால் இந்த நேரத்தில் தற்கொலை பற்றி நினைப்பதே நம் நோக்கங்களை சிதைக்கக் கூடிய முயற்சியாகத் தான் இருக்கும்.



உன் கவனத்திற்கு மேலு மொன்றை கொண்டு வர விரும்பு கிறேன். கடவுள், நரகம், சொர்க்கம், தண்டனை, நல்வினைப்பயன்கள் இவற்றை யெல்லாம் நாம் நம்புவ தில்லை. அதாவது கடவுள் பற்று டைய மானுட வாழ்வில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. அதனால் வாழ்வையும் மரணத்தையும் பொருள் முதல் வாதப் பார்வை கொண்டே நாம் நோக்க வேண்டும். அடையாளம் கண்டு ணரும் பொருட்டு டில்லியிலிருந்து நானிங்கு அழைத்து வரப்பட்ட போது, சில புலனாய்வுத்துறை அதிகாரிகள் எனது தந்தை முன்னிலையில் விசாரணை நடத்தினார்கள். ரகசியங்களை வெளியிட்டு நான் என் உயிரை காப்பாற்றிக் கொள்ள முயற்சிக்காவிட்டால் மூர்க்கமான தெய்வத்தண்டனைக்கு ஆளாக நேரிடும் என்று அவர்கள் சொன்னார்கள். அப்படி இறக்க நேருதல் தற்கொலைக்கு ஒப்பா னதே என்றும் அவர்கள் வாதாடி னார்கள். ஆனால் நம்பிக் கைகளோடும் லட்சியங்களோடும் வாழும் என்னைப் போன்ற மனிதன் வீணாய் மரணம் பற்றிய நினைப்பை மனங்கொள்ளவே மாட்டான். நம் வாழ்வின் மகோன்னத மதிப்புகளை எய்த நாம் விரும்பவேண்டும். மனிதகுல மேன்மைக்காக எவ்வளவு இயலுமோ அவ்வளவு உழைக்க வேண்டும். குறிப்பாக என் போன்றோரது வாழ்வில் கவலைகளுக்கும் வருத்தத்திற்கும் இடமேயில்லை. தற்கொ லைபுரிகிற, அம்முயற்சியில் தனியனாய் செயல்படுகிற எணணமும் இல்லை. இதையே தான் உன்னிடமிருந்தும் எதிர்பார்க்கிறேன்.

என்னைப் பற்றி நான் நினைப்பவற்றையெல்லாம் இங்கே சொல்ல அனுமதிப்பாய் என்றே நம்புகிறேன். என்வரையில், ஐயத்திற்கிடமின்றி

www.padippakam.com



நானே தண்டனை அதிகம் பெற்றவனாய் இருக்கிறேன். அரசின் நடுநிலைத் தன்மையையோ நான் சிறிதும் எதிர்பார்த்திருக்கவில்லை. அதற்கு இடமிருந்தாலுங்கூட அது எல்லோருக்கும் அளிக்கப் படமாட்டாது. மற்றவர்கள் மன்னிக்கப்படலாம்; ஆனால் நாமல்ல; அரசியல் குற்ற மன்னிப்பானது நிச்சயம் சிரமந்தரும் பல்வேறு நிபந்தனைக ளோடும் தீவிரமான ஒடுக்குமுறை யையே ஏவும். நமக்கு மன்னிப்பு வழங்கப்படமாட்டாது. அத நடக்கப்போவதுமில்லை. இருந்த போதிலும், பரந்துப்பட்ட நோககுடன் நாம் அனைவரும் முழு மொத்தமாக விடுதலை செய்யப்படுவதையே நான் விரும்புகிறேன். புட்சியியக்கம் அதன் உச்சக்கட்டத்தை அடையும் வேளையில் நாம் தூக்கிவிடப்படவேண்டும் என்றும் விழைகிறேன். எந்த நேரத்திலம், நமது வாழ்க்கைதடங்கலாய் உணராத, மாசற்ற பெருமைக்குரிய ஒரு சமரச உடன்பாடு ஏற்படுவதில் ஆர்வங் கொண்டிருக் கிறேன். நாட்டின் விதி தீர்மானிக்கப்படும் வேளையில் தனி மனிதர்களின் விதி மறக்கப்படவே வேண்டும். புரட்சியாளர்களான நாம், கடந்தகால கசப்பான அனுப வங்கள் மீது எச்சரிக்கை கொண்டி ருக்கிறோம்.

ஆகவே, நமது ஆட்சியாளர் களின் மனப்பான்மையில், குறிப்பாக ஆங்கிலேயரிடம் ஏதாயினும் திடீர் மாற்றம் நிகழுமென்று நாம் நம்பவில்லை. புரட்சியால் தவிர அதுபோன்ற ஆச்சர்யப் படத்தக்க மாற்றம் நிகழ்வது சாத்தியமில்லை. கடுமையாய் செயலாற்றுதல், கஷ்டங்களை சகித்தல், தியாகங் கள் இவற்றை தளராமல் தொடர்ந்து மேற் கொள்வதன் வாயிலாகவே புரட்சியை சாதிக் முடியும். அதன் வெற்றியும் எய்தப்பெறும்.

என்வரையில், துணைநல வாய்ப்புகளையும், எல்லோருக் குமான அரசியல் குற்ற மன்னிப்பையும் - அவற்றின் பலன் நிரந்தரமாக இருக்கும் பட்சத்தில் - மகிழ்ந்து வரவேற்க முடியும். ஆனால் தூக்கிடப்பட்டு நாம் சாவதன் மூலம் சில ஆழ்ந்த பாதிப்புகள் நம் நாட்டு மக்களின் நெஞ்சங்களில் நிலைபெறும். இவ்வளவுதான்: வேறொன்றும் சொல்வதற்கில்லை.

தமிழில்: சமந்தா.

முன் அட்டை உதவி:

மூன்றில்

www.padippakam.com

# பயணமும் தொடரும் பாடலும் தொடரும்

கே.சி.எஸ். அருணாசலம்

கவிஞர்கள் நாங்கள்!

நாங்கள் பயணம் தொடங்கிய நாளையும்
முதன்முதல் பிறந்த பாடலின் வயதையும்
உலகில் இதுவரை யாரும் தெளிவாய்
உணர்ந்ததும் இல்லை உரைத்ததும் இல்லை!

கவிஞர்கள் நாங்கள் மனித மனங்களின்
கதவினைத் தட்டி உள்ளே உறங்கும்
சத்திய உணர்வின் சோம்பல் கலைத்து
வைகறை வெள்ளியை வாழ்த்தும் பாணர்கள்!

எங்கள் பாதை எமக்கே உரியது
எமது வழித்துணை எம் மன சாட்சி!

கூனல் பிறையும் குளிர் முகில் குலமும்
ஆனித் திங்களின் சாரவில் நனைந்து
ஈரம் படிந்த கானக மலர்களும்
வெள்ளி உருகி விழ்வது போல
பள்ளம் நோக்கிப் பாயும் அருவியும்
நீலக் கடல்களும் நெடுமா மலைகளும்
சோலைக் குயில்களின் சோகப் பண்களும்
எமது கவிதையில் என்றும் எழில்பெறும்!



மைவிழி ஓரம் மலரும் நிலவில்
மனதினில் பொங்கிடும் காதல் நினைப்பை,
பாலமு தூட்டிப் பாருல கிதனைப்
பாலனம் செய்திடும் தாயின் மேன்மையை
பாடிப் பாடிப் பரவசம் அடைவோம்.

வேதம் புராணம் காவியம் யாவும்
சிதள் கங்கையின் சிறப்பினைப் பாடும்.

படிப்பகம்

www.padippakam.com



மூவா இளமைக் கங்கை பொன்னியெம்
நாவினில் தவழ்ந்த கவிதையில் நனைந்தவை!



எவர்களுக்காக இந்த உலகினில்
எவரும் கண்ணீர் சிந்தியதில்லையோ
அவர்களுக்காகவே நாங்கள் அழுகிறோம்
அவர்களுக்காகவே கவிதை எழுதினோம்.

எங்கள் பாதை எமக்கே உரியது
எங்கள் வழித்துணை எம்மன சாட்சி!

திருமகள் உலவும் அரண்மனை வாசலை
நாடிய தில்லை பாடிய தில்லை!
குடிசையில் வாழும் கோடானு கோடி
அடிமைகட் கெங்கள் பாட்டொலி கேட்கும்!

பாதை மாறாத பயணம் செய்தோம்
சிறைகளில் கிடந்தோம் சிதைகளில் எரிந்தோம்!
சக்கர வர்த்தியின் தங்கத் தேர்களின்
சக்கரம் அழன்றெம் மார்பில் பதிந்தன
சவுக்கடி யாலெம் தசைகள் சிதறின

பாதையிலிருந்து மாறிய தில்லை
பயணமும் கவிதையும் ஒய்ந்ததும் இல்லை!

உண்மையும் ஒழுக்கமும் நீதியும் நேர்மையும்
கண்ணின் எதிரே கைவிலங் கோடு
சூடு பட்டுத் துடிக்கும் துயரம்
விடியும் வரைக்கும் நாங்கள் தொடங்கிய
பயணமும் தொடரும் பாட்டும் தொடரும்.

படிப்பகம்

www.padippakam.com

# போக்கு வரத்து

இராகுலதாசன்

வியாழக்கிழமையாவது கடிதம் வந்திருக்க வேண்டும். கடிதம் வராதது அப்பாவுக்கு மிகவும் கவலையைத் தந்துகொண்டிருந்தது. பின்பக்கமாய்க் கட்டிக் கொண்டிருந்த கைகளில், விரல்களை நீட்டியும் மடக்கியுமாய் தினங்களை அப்பா எண்ணினார்: ''ஒன்று, ரெண்டு,மூன்று, நாலு, வியாழன் நாலாவது நாள் இன்னும் லெட்டர் வரலையே''



முன் வராந்தாவிலிருந்தபடியே ஜன்னல் வழியாய்ச் சில நேரம் தெருவை உற்றுப் பார்த்தார்; இருப்புக் கொள்ளாத உணர்வில் வெளியே வாசலில் நின்று தெருவை வெறித்துப் பார்த்தார். ஊகும். இன்னும் இன்றைக்கு வரவேண்டிய தபால்கார வைத்தி வரவில்லை: ''இந்த வைத்திப் பயல் சுறுசுறுப்பான பயல் தான். இருந்தாலும் ஒவ்வொரு வீட்டிலும் குசலம் விசாரிப்பதிலே நேரம் ஆக்கிப்புடுவான்''

''திண்டிவனம் இங்கேயா இருக்கு.திருவள்ளுவர்லே போனாக்கூட ஒன்பதுமணி நேரம் எடுத்துக்கிறான். போக்கும் வரத்தும் காரும்

படிப்பகம்

www.padippakam.com



வண்டியும் அய்யய்ய...என்னா வேகம்! பரபரப்பு...இன்னும் பதில்கடிதம் வரலையே''-

அப்பா மனம் துடித்தது. பிள்ளை ஞாயிற்றுக்கிழமை போனான். திங்கட் கிழமை ஒரு கார்டு போட்டாலும், செவ்வாய், புதன் போக வியாழன் வந்துவிடுமே, இன்னும் வரலையே...''

அதோ, காக்கிப்பொம்மை மாதிரி தபால்காரப் பயல் வைத்தி வந்துட்டான். அவனுக்கு எங்கே அப்பாவின் அவசரம், துடிப்பு புரியப்போகிறது. நேரே சைக்கிளை அப்பா நிற்கிற இடத்தில் கொண்டு வந்து நிறுத்தலாம் தானே..வெளியே காம்பவுண்டுக் கேட்டின் ஓரம் நிறுத்தி விட்டு, செருப்பும் இல்லாத கால்களில் மெதுவாய் நடப்பான்..

அப்பாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. ''வைத்தீ..கடிதம் இருக்கா''.

அப்பாவிடம் வைத்தி சிறிது கூடுதலாக உரிமை எடுத்துக்கொள்வான். 'இருங்கோ சார். கார்டுதானே. திண்டிவனம் போயிருக்க பையன் சுகமாப் போய்ச் சேர்ந்த விஷயம் தெரியணும்.. அவ்வளவுதானே... இந்தா தாரேன்..சித்தே இருங்கோ'' -என்று இத்தனை வார்த்தைகளையும் நின்று நிதானித்து உச்சரித்து அப்பாவை நெருங்கி, வழக்கமான ஒருஅசட்டுச் சிரிப்பை உதிர்த்துவிட்டு ''இந்தாங்க'' என்றான்.

அப்பா எதிர்பார்த்த கார்டு வந்து விட்டது. திண்டிவனத்திற்குப் போய் இறங்கியதும், பஸ் நிலையத்திலேயே, பிள்ளை பெட்டியில் போட்ட பதினைந்து காசுக் கார்டு. ''டியர் அப்பா'' என்ற வாசகமும் கூட அதில் இருக்காது. இரண்டே ஆங்கில வார்த்தை கொட்டை எழுத்துக்களில், ''சேஃப்லி அரைவ்டு''

கார்டை அப்படியும் இப்படியுமாய்ப் படித்துவிட்டு உள்ளே போனார் அப்பா. இருநூறுமைல் பஸ் பயணம் பிள்ளைக்கு சுகமாய் இருந்தது பற்றி, சுகமாய், பத்திரமாய் போய்ச் சேர்ந்தது பற்றி அப்பாவுக்குப் பரம திருப்தி. உடனே பதில் எழுதுவது அப்பாவின் வழக்கம். பதினைந்து காசுக்கார்டில் பின்வருமாறு எழுதினார்.

''அன்புள்ள தம்பி, உன் 'சேஃப்லி அரைவ்டு' கார்டு வந்தது. மகிழ்ச்சி. உன்னைப் பஸ் ஏற்றிவிட்டு, நானும் அம்மாவும், தங்கையும், உன் கிரிக்கெட் நண்பன் ரமேசும் ஆக எல்லாரும் பஸ் ஸ்டாண்டிலிருந்து வீட்டுக்கு 'சேஃப்லி அரைவ்டு''

-அன்புள்ள அப்பா

www.padippakam.com

# சோக நாடகம்

## கல்கி

1940ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் நான் ஒரு கதை எழுதியிருந்தேன். "விநாயகத்தின் விடுதலை" என புது தலைப்பு. விநாயகம் என்பவர் ஒரு 'கௌரவ' ஜெயில் விஸிட்டர். அவர் ஒரு



கனவு காண்கிறார். சத்தியாக்கிரகத்தில் சேர்ந்து சிறைக்குப் போய் - (கனவில்தான்) விடுதலை எப்போதுவரும் என்று தவித்துக்கொண்டிருக்கிறார். கடைசியில் ஒருநாள் விடுதலை வருகிறது. விடுதலை ஆனதும், சிறையின் வாசலிலேயே அவரை மறுபடியும் பாதுகாப்புச் சட்டத்தின்படி கைது செய்கிறார்கள். உடனே அர்வ பிராணன் போய்க் கீழே விழுந்துவிடுகிறார்! - தூக்கத்திலிருந்து விழித்தெழுந்ததும் சிறை விஸிட்டர் வேலையை ராஜினாமா செய்கிறார்.

திருச்சி சிறைக்கு நான் போன புதிதில் ஒரு நாள் நண்பர் கிருஷ்ணசாமி பாரதி மேற்படி கதையைப் பற்றி பிரஸ்தாபித்தார். "உங்கள் கதை வெளியான அதே சமயத்தில் இங்கே அதேமாதிரி ஒரு சம்பவம் நடந்தது. ஆகையால் கதை ரொம்ப ரொம்ப ஆச்சரியமளித்தது" என்றார்.

"அது என்ன?" என்று கேட்டேன்.

"பாலதண்டாயுதம் தெரியுமல்லவா?" என்றார்.

"தெரியாது. ஆனால் பெயர் கேட்டிருக்கிறேன். சிதம்பரத்தில்..."

"ஆமாம், ஆமாம், அண்ணாமலை சர்வ கலாட்டா

படிப்பகம்

www.padippakam.com



சாலை, சம்பவங்களில் பெயர் வாங்கியவர் தான். ஆனால் அவருக்கு இங்கே ரொம்ப நல்ல பெயர்...''

''அவர் இங்கே இருக்கிறாரா, என்ன?'' என்று ஆவலுடன் கேட்டேன்.

''இப்போது இல்லை. போன மாதம்வரையில் இருந்தார். இங்கே அவர் ராஜாஜிக்கு ரொம்ப அத்தியந்த சிஷ்யராகி விட்டார்''என்றார்.

நான் நிமிர்ந்து உட்கார்ந்து, ''அப்புறம்?'' என்றேன். ''உங்களுக்குத் தெரியுமோ என்னமோ, அவர் சிறைக்கு வருவதற்குக் கொஞ்ச நாளைக்கு முன்புதான் கல்யாணம் செய்து கொண்டார். அவர் மனைவி காலேஜ் மாணவி. அவரை, 'இன்டர்வியூ' பார்ப்பதற்காக அந்தப் பெண் சிலசமயம் இங்கே வந்திருந்தாள். புது மணம் புரிந்தவர்கள், அதிலும் காதல் கல்யாணம் ஒரே சோக நாடகம் தான் என்றார். ''கடேசியில் நாடகம் சுபமாகத்தானே முடிந்தது?'' என்று கேட்டேன்.

''அதுதான்? இல்லை'' என்றார் பாரதி.

மேலே சொன்னார்: ''பாலதண்டாயுதம் சிறையிலிருந்து விடுதலையான பிறகு வாழ்க்கை நடத்துவது பற்றி என்ன வெல்லாமோ பிளான் போட்டுக் கொண் டிருந்தார். தெரிந்தவர்கள் எல்லாம் கொஞ்சநாளைக்கு மனைவியுடன் நிம்மதியாய் இல்வாக்கை நடத்துங்கள் என்று சொன்னார்கள்.... விடுதலை நெருங்க நெருங்க அவர் தவித்த தவிப்பையும் அடைந்த பரபரப் பையும் பார்க்க வேண்டுமே! விடுதலைக்கு முதல்நாள் அவர் தரையில் நடக்கவேயில்லை. ஒவ்வொருவராய்ப் போய் விடை பெற்றுக்கொண்டார். இராத்திரி ஒரு நிமிஷம்கூடக் கண்மூடியிருக்க மாட்டாரென்று நினைக்கிறேன்!''

பாரதி மேற்கண்டவாறு இலக்கிய தோரணையில் கதையை சொல்லிவந்து முக்கியமான இடத்தில் நிறுத்தினார். கதையின் முடிவை தெரிந்துகொள்ள எனக்கிருந்த பரபரப்பைச் சொல்லிமுடியாது.

''மறுநாள் விடுதலை ஆயிற்றோ, இல்லையோ?'' என்றேன்.

''விடுதலை ஆயிற்று?''

''பின்னே என்ன?''

''கொஞ்சம் பொறுங்கள். மறுநாள் பொழுதுவிடிந்தது, ஜெயில் கதவு திறந்தது, பாலதண் டாயுதம் மலர்ந்த முகத்துடன் எல்லோரிடமும் விடைபெற்றுக்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டு வெளியில் போனார். அவரை வரவேற்பதற்கு அவருடைய மனைவி சிறைவாசலில் வந்து தயாராய் காத்துக் கொண்டிருந்தாள். புருஷனும் மனைவியும் சந்தித்துப் பேசிக் கொள்வதற்குள் சில போலீஸ் அதிகாரிகள் வந்தார்கள். பாலதண்டாயுதத்தைஅழைத்துக் கொண்டு போய்ச் சாலையில் நின்று கொண்டிருந்த போலீஸ் வண்டியில் ஏற்றினார்கள். பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அவரைக் கைது செய்து வேலூர்



ஜெயிலுக்குக் கொண்டு போவதாக தெரிந்தது. அப்போது சிவில் ஜெயிலைச் சுற்றி தட்டிவைத்துக் கட்டவில்லை. நாங்கள் எல்லோரும் உள்ளேயிருந்தபடி பார்த்துக் கொண்டு தான் இருந்தோம். ஆகா! அந்தப் பரிதாபக் காட்சியை நான் மறக்கவே முடியாது!''

பாரதி ரொம்ப உருகிப்போய் இதையெல்லாம் சொல்லிவந்தார். என்னுடைய மனமும் கசிந்துவிட்டது. இந்த நிஜக்கதை, கற்பனைக் கதையெல்லாம் தூக்கி அடிக்கிறதே என்று நினைத்தேன்.

''பாவம்! அந்தப் பெண் என் செய்யப்போகிறாளோ தெரியாது. இத்தனை நாளும் திருச்சியில் ஸ்ரீரத்தினவேலுத் தேவர் விட்டில் இருந்தாளாம். அடிக்கடி இங்கு வந்து இண்டர் வியூ பார்க்கவாவது முடிந்தது, இனிமேல் எப்படியோ? இந்த தம்பதிகளைப் பற்றி இங்கே பரிதவிக்காதவர்கள் கிடையாது. ஆகையால் தான் 'விநாயகத்தின் விடுதலை' எங்களுக்கு அவ்வளவு சுவாரஸ்யமாயிருந்தது. ரொம்ப பேருக்கு அதை நான் வாசித்து காட்டினேன்'' என்று பாரதி ஒருவாறு முடித்தார்.

*

-மூலம்: **'மூன்று மாதக் கடுங்காவல்'**

-தகவல்: ஆர்.என்.கே.


**தாமரை ஆண்டு சந்தா**

**ஆண்டு ரூ.45**

**6 மாதம் ரூ.24**

**தனிப்பிரதி ரூ.4**

www.padippakam.com

# வாழ்வு குறித்து சில யோசனைகள்



சிக்கலாகப் படுகிறது
உங்கள் வாழ்வுகுறித்த
பிம்பங்களை
உடைத்துக் கொள்ளுங்கள்!
எங்காவது
யாராவது ஏதாவது
செய்துவிட்டுப் போக
அது உங்களிடமும்
வந்து நிற்கும்
நிலையறியாது நீங்களும்
ஏதாவது செய்துவிட சஞ்சலப்படுவீர்கள்.
ஜனனத்திற்கும்
மரணத்திற்குமான
தூரங்களை
அர்த்தப்படுத்திக் கொள்ளுங்கள்.
நடைமுறையில்
சிறிதுசிறிதாக
அறிமுககப்படும்போது
எதிர் முகாமின்
தாக்குதலுக்குட்படலாம்
எதிர் பார்ப்புகளை விட்டொழித்து
உங்கள் வாழ்வுகுறித்த
பிம்பங்களை
உடைத்துக் கொள்ளுங்கள்!

**–எஸ்.சரவணன்**

படிப்பகம்

# எம்.டி.வாசுதேவன் நாயர்

## ஜி.பாலசுப்ரமணியன்

இந்தியாவில் எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் மிக உயர்ந்த பரிசான ஞானபீடப்பரிசு இம்முறை (1995) மலையாள எழுத்தாளர் திரு.எம்.டி.வாசுதேவன் நாயர் அவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளது. இவ்வ கைப் பரிசுகள் ஒரு பிராந்திய எழுத்தாளரை இந்தியா முழுமைக்கும் அடையாளம் காட்டுகின்றன.

இப்போது இவருக்குக் கிடைத்திருக்கும் ஞானபீடப் பரிசுடன் கன்னடம், ஹிந்திக்கு அடுத்து வங்காள மொழியைப் போல் ஞான பீடப் பரிசுகளை அதிக அளவில் பெற்ற மூன்றாவது இந்திய மொழி என்ற பெருமையை மலையாளம் பெறுகிறது.



எம்.டி. என்று மலையாள இலக்கிய ஆர்வலர்கள் நெஞ்சத் தில் வைத்துப் போற்றும் இவர் இந்திய வாசகர்களுக்குப் புதியவ ரல்ல. சுமார் நாற்பது ஆண்டு காலமாக, அவரே கூறுவது போல, ‘அனுபவங்களையும் உணர்வு களையும் அவற்றின் ஒலி, நிறம், மணம் கலந்து ஒரு நிஜ உலகத்தைப் படைத்து’ மலையாளிகளுக்கு மட்டுமல்லாது ஆங்கிலம் மற்றும் பிற இந்திய மொழிகளின் மொழி பெயர்ப்பு மூலம் இந்திய வாசகர்களுக்கு ஏற்கனவே அறிமுகமானவர் தான்.

www.padippakam.com



நடையுடை பாவனைகளில் எளிமைக்குப் பெயர்பெற்ற மலையாளிகள் மத்தியில் எளிமையிலும் எளிமையாக வேட்டியும் அரைக் கைச் சட்டையும் புகைகின்ற பீடியுமாகக் காட்சியளிக்கிறார் எம்.டி.வாசு தேவன் நாயர்.

மலையாளம் தற்கால இந்திய இலக்கியச் சூழலில் மிகவும் முன்னிலை வகிப்பதற்குக் காரணமாக விளங்கும் சிறுகதை மற்றும் நாவல் என்ற இரண்டிலும் தனது தனிப்பட்ட முத்திரையைப் பதித்துள்ளார் எம்.டி. சுமார் இருநூறு சிறுகதைகளையும் எட்டு நாவல்களையும் எழுதியுள்ள இவர் இலக்கியமாக்கியிருப்பதெல்லாம் மனித உறவுகளையும் உரசல்களையும்தான். உறவுகளில் மட்டுமல்லாது உரசல்களிலும் அவர் படம் பிடித்துக் காட்டுவது மனிதநேய மல்லாது வேறில்லை. இவரது படைப்புகளில் பெரும்பான்மை, நாயர்களின் மருமக்க்த்தாயம் எனப்படும் பெண் வழிச் சமூகமும் கூட்டுக் குடும்ப அமைப்பும் சமூக அரசியல் மாற்றங்களால் தகர்ந்த சூழலையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் பின்புலங்களாகக் கொண்டு எழுதப்பட்டவை. சமூக நிகழ்வு களை அப்படியே எழுத்தில் வடித்துக் காட்டுவதல்ல இவரது இயல்பு. மாறாக அந்நிகழ்வுகள் ஒரு தனிமனிதனில் ஏற்படுத்தும் மாற்றங்களையும் உணர்வுகளையும் தனி மனிதப் பார்வையாக இயல்பான ஓவியம் போல் எழுத்தில் வரைந்து காட்டுவதே இவரது தனிச் சிறப்பு. எம்.டி. எழுதிய 'கற்கடகம்', 'குட்டியேடத்தி', 'இருட்டிண்ட ஆத்மாவு', 'கருத்த சந்திரன்', 'வித்துகள்', 'நின்டெஓர்மெக்கு', 'வானபிரஸ்தம்' போன்ற சிறுகதைகளும் 'நாலுகெட்டு', 'அசுரவித்து', 'மஞ்ஞ்சு', 'காலம்', 'ரண்டாம் மூழம்', முதலான நாவல்களும் மிகச் சிறந்தவையாகும்.

'வள்ளுவநாடு', 'தெற்குமலபார்' என்றெல்லாம் அழைக்கப்படும் இவர் பிறந்த மண்ணின் 'வாசனையையும்', பாரதப்புழ என்ற ஆற்றின் 'நீரோட்டத்தையும்' கேரளத் திற்கே உரிய மனதைக் கவரும் 'பசுமையையும்' இவரது நடைமூலம் ஒரு வாசகன் அனுபவித்துணர முடியும். சுருங்கக் கூறினால் மலையாளத்தில் சிறுகதையைக் கவிதையைப் போலாக்கியவர். இவர் இப்பகுதி நாயர்கள் மறந்துவிட்ட அல்லது மறந்து கொண்டிருக்கிற நல்லதும் கெட்டதுமான சடங்குகளும் மரபுகளும்தான் எம்.டி.யின் பெரும்பாலான கதைகளுக்கு அடிப்படைகளாக அமைந்துள்ளன. இதனால்தானோ என்னவோ இலக்கிய விமர்சகர்கள் இவரை 'நினைவுகளின் எழுத்தாளர்' என்று குறிப்பிடுகின்றனர்.

காலத்தையும் படைப்பா

www.padippakam.com



ளியையும் கூட விஞ்சி நிற்கக் கூடிய கதாபாத்திரங்களைப் படைத்து வாசகர்களின் மனதில் உலவவிட்டுள்ள எம்.டி.ஐப் பற்றிய எதிர் மதிப்பீடுகள் இல்லாமல் இல்லை. எம்.டி.யின் கதைகள் சுயநிந்தனைகளும் வெறுப்பும் நிறைந்தனவாகவே உள்ளன என்று கூறப்படும் விமர்சனங்களுக்கு இவர் கூறும்



பதில் இதுதான்:

''சுயநிந்தனை அவ்வளவு மோசமானதா என்ன சுயதேடல் நடத்துகிற எந்த ஒரு மனிதனுக்கும் சுயநிந்தனை இருக்கத்தான் செய்யும். தனக்குத்தானே உயர்த்திப் பேசுவதில் என்ன சிறப்பு இருக்கிறது? எனக்குத் தெரிந்த நல்ல சுயசரிதைகளிலெல்லாம் சுயநிந்தனையும் உண்டு. அதுமட்டுமல்ல, நம்முடைய குறைகளை உணர்ந்தால்தான் நமக்கு ஆற்றல் கிடைக்கும். ஆற்றல் இருந்தால் மட்டுமே நம்முடைய குறைகளைக் கண்டறியும் சுயஉணர்வு ஏற்படும்.''

அறுபத்திரண்டு வயது நிரம்பிய அதிகம் பேசாத இம்மனிதரின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் ஏற்ற இரக்கங்கள் தாராளம் உண்டு. இப்போது ஒரு மனைவி, மகளுடன் மகிழ்ச்சியாக வாழும் எம்.டி. மன ஒருமையே மாங்கல் யத்தைவிட மேல் என்று ஏற்றுக்கொண்ட முதல் வாழ்க்கைத் துணையைப் பிரிய நேரிட்டது. தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி எழும் விமர்சனங்களுக்கு இவர் கூறுவது ''சமூகம் 'இரை'க்காகக் காத்திருக்கும்'' என்று மட்டுமே. தொடர்ந்து பதினைந்து இருபது ஆண்டுகள் இடைவிடாமல் குடிப்பழக்கத்திற்கு அடிமையாயிருந்ததால் ஈரலில் பாதிப்பு ஏற்பட்டு இறக்கும் தருவாய்க்குச் சென்று மீண்டவர். இப்படிப்பட்டவர் குடியைப் பற்றிக் கூறுவது இக்'குடி' காலத்தில் சிந்திக்கத் தக்கது. ''குடிப்பதனால் எழுத்தாளர்களுக்கும் கலைஞர்களுக்கும் நல்ல 'மூட்' கிடைக்கும் என்று கூறுவது முட்டாள்தனமாகும். குடித்தால் எழுத முடியாது. குடித்து விட்டு நான் இதுவரை ஒரு

www.padippakam.com



வரிகூட எழுதியதில்லை. குடி மனிதனை அழிப்பதைத் தவிர வேறு எதையும் செய்யாது. நேரமும் பணமும் நஷ்டம். அதன் பிறகு குற்ற உணர்வு. நான் எனது நீண்ட கால அனுபவத்தில் இதைச் சொல்கிறேன்''.

மாத்ருபூமி வாரப்பதிப்புகளின் ஆசிரியராக நீண்ட காலமாகப் பணியாற்றி வரும் எம்.டி. கேரளத்தின் பல முதலமைச் சர்களிடமிருந்தும் இந்தியாவின் மூன்று நான்கு குடியரசுத் தலைவர்களிடமிருந்தும் விருதுகளையும் பரிசுகளையும் பலமுறை வாங்கிக் குவித்திருக்கிறார். அவற்றுள் பல திரைப்படத் தொடர்பான அவரது படைப்புக்களுக்குரியனவுமாகும். இன்றைக்கு மலையாள திரைப்படத் துறையில் மிகச் சிறந்த திரைக் கதையாசிரியராகக் கருதப்படும் இவர் பல திரைப் படங்களுக்குக் கதை, வசனம் எழுதியதோடு மட்டுமன்றி பரிசு பெற்ற சில திரைப்படங்களை இயக்கியும் உள்ளார்.

திரைப்படத் துறையில் இவ்வளவு வெற்றிகளும் பெருமைகளும் அடைந்தாலும் இலக்கியப் பணியே தன் மனதுக்குப் பிடித்தது என்றும் ஆத்மதிருப்தி தருவது என்றும் கூறுகிறார்.

o

# தேசிய விருது

சென்ற ஆண்டின் சிறந்த ஓவியத்திற்கான லலித் கலா அகாடமியின் தேசிய விருது நம் தமிழகத்தைச் சேர்ந்த விஸ்வத்திற்கும், சிற்பத்திற்கான விருது மூக்கையாவிற்கும் கிடைத்தன.

இந்த ஆண்டும் சிற்பத்திற்கான தேசிய விருது தமிழகத்திற்கே கிடைத்திருக்கிறது. விருதுவென்ற



'குழல் வாசிப்பு' என்னும் வெண்கலச் சிலையைப் படைத்த வேலாயுதம் சென்னை அரசுக் கலைக்கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

பிரச்சினைகளின் பாதிப்பும் அவற்றிலிருந்து மீள்வதற்கான நம்பிக்கையுமே படைப்பிற்கான விஷயங்களாக எனக்குப் படுகிறது என்கிறார் வேலாயுதம்.

—

படிப்பகம்

www.padippakam.com

# அருகதை


## என்.ரவீந்திரன்

பேருந்தை விட்டு இறங்கும் போதே சின்னச்சாமி நின்று கொண்டிருப்பதைப் பார்த்தான் சேசாத்திரி.

முன்னைக்குக் கறுத்து மெலிந்து போயிருந்தான். தலை பாதிக்குமேல் நரைத்துப் போயி

வேகமாய் அருகில் வந்தான்.

"வா சேச்சு! காலம்பறவே வந்திட்டேன். முதல் பஸ்ஸுக்கே வந்திடுவேன்னு நினைச்சேன். ஏன் பஸ்ஸை விட்டுட்டியா. வெயில் ஏற ஆரம்பிச்சுட்டுதே."



ருந்தது. அழுக்கடைந்த வேஷ்டி... வெற்று மார்பு. துண்டை கை இடுக்கில் வைத்திருந்தான். அவன் முகத்தில் ஒருவித எதிர்பார்ப்பு தென்பட்டது.

சேசாத்திரியைக் கண்டதும் முகம் மலர்ந்து போனவன்

சேசர்த்திரி பதிலுக்குப் புன்னகைத்தான். விலக்குப் பாதையில் நடக்க ஆரம்பித்தார்கள்.

துருப்பிடித்துக் கிடந்த பழைய காலத்து தகரபோர்டு வாழவந்தான் ஒரு கிலோ மீட்டர் என்று கூறியது.

சேசாத்தரி மௌனமாய் நடந்து

www.padippakam.com



கொண்டிருந்தான்.

"ரொம்ப இளைச்சு போயிட்டே சேச்சு! நீ வராத இருந்திடுவியோன்னு தவிச்சுப் போயிட்டேன்."

மீண்டும் சேசாத்திரி புன்ன கைத்தான்.

முப்பது வயது சேசாத்திரிக்கு புஷ்டியான உடற்கட்டு... சுருள் சுருளாய் கேசங்கள். அச்சாய் அவன் அப்பாவைப் போலவே.... சேசாத்திரியைப் பார்ப்பது அவரை பார்த்த மாதிரி இருந்தது. சின்னச்சாமியின் கண்கள் லேசாய் கலங்கி நடை தளர்ந்தது. சேசாத்திரி நின்று திரும்பிப் பார்த்தான். "ஏன் மெதுவா நடக்கறீங்க" கேட்டான். மரியாதையாய் அவன் பேசிய மொழிகளில் சின்னச்சாமி சிலிர்த்துப் போனான். ஒருமை யான வார்த்தைகளையே கேட்டுப் பழகிப் போன காதுகள் அவன் காதுகள்.

என்ன இருந்தாலும் சேச்சு... சேச்சுதான். "கல் உடைக்கப் போனேன். கால்லே குத்தி ரணமா யிடுச்சு. இரண்டு மாசமாகியும் ஆறலை." வேஷ்டியைத் தூக்கி பாதத்தைக் காட்டினான்.

பாதம் வீங்கிப் போயிருந்தது. ரணத்திலிருந்து லேசான நீர் கசிவு. பழந்துணியால் சுற்றியிருந்தான்.

"ஆஸ்பத்திரியிலே காட்ட லியா".

"காட்டினேன். ஊசி போட்டு மாத்திரை கொடுத்தாங்க. சனியன் ஆறவே மாட்டேங்குது"

மீண்டும் நடக்க ஆரம்பித்தார்கள்.

"வேலைக்குப் போகலியா"

"இல்லே"

"பிறகு சாப்பாட்டுக்கு வழி"

அவன் பெருமூச்சு விட்டான்.

"பொண்ணு தீப்பெட்டி ஒட்டுறா. ஒரு நாளைக்கு நூறு அட்டைக்கு மேல ஒட்டிடுவா. ஏதோ பொழுது கழியுது."

சேசாத்திரி தலையாட்டியபடி நடந்தான்.

"பையன் பொறந்திருக்கா னாமே" சின்னச்சாமி கேட்டான்.

"உம்"

"பேர் என்ன வச்சிருக்கே"

"அப்பா பேரு... சுந்தரராஜன்"

"என் பொண்ணுக்கும் அவர் பேருதான் சுந்தர வடிவு." சொல்லியவன் சட்டென்று நிறுத்தி விட்டு சேசாத்திரியைப் பார்த்தான். அவன் பார்வை எங்கோ லயித்திருந்தது. கொஞ்சம் நகர்ந்து பார்வையில் படும்படிக்கு வந்து நடந்தான்.

"எல்லாரும் சத்தம் போட்டாக. அவர் பேரை வைக்கக் கூடாதுன்னு. அடிக்காத குறைதான்."

www.padippakam.com



சேசாத்திரி எட்டி நடக்க. பாதத்தின் வலியைக் கூட பொருட்படுத்தாமல் வேகமாய் நடக்க ஆரம்பித்தான் சின்னச்சாமி.

''சொல்லு சேச்சு... தப்பா... நீ சொல்லு''

''அதனால என்ன இப்ப...'' சுரத்தின்றி சொன்னான் சேசாத்திரி.

வழி நெடுகிலும் கம்பங்காடு. சிவகாசியிலிருந்து விலகி ஏழாவது கிலோ மீட்டரில் வாழவந்தான் கிராமம். வானம் பார்த்த பூமி. செவக்காட்டு நிலம்.



அந்தக் காலத்த கிராமம். எப்போதோ ஒரு முறை பஸ் வந்து போகும் பிரதேசம். ஊர் உலகமெல்லாம் மழை அருவியாய்க் கொட்டினாலும் பெயரளவுக்குக் கூட மழை பெய்யாத அக்னிப் பிரதேசம்.

ஊருக்கு மத்திமமாய் கோபாலன் கோவில். சுற்றிலும் அக்ரஹாரம். பொலிவிழந்து சிதில மடைந்து போன வீடுகள். ஒன்றிரண்டு பிராமணக் குடும்பங்கள். போகிற ஜீவன் வாழ வந்தானிலேயே போகட்டும் என்று அட்டையாய் ஒட்டிக் கொண்டிருக்கிற வறட்டு ஜீவன்கள்.

முடிந்த அளவு ஆசாரத்தை அனுசரித்து ஊரோடும் மற்றவர்களோடும் ஒத்துப் போகிறார்கள்.

ஊரை நெருங்கும் போதே வரிசையாய் இருந்த அக்ரஹாரத்து வீடுகளின் மத்திம வீட்டில் இருந்து இரண்டு உருவம் சாலையைப் பார்த்தபடியே நிற்பது தெரிந்தது.

''சேச்சு! ஒங்க வீட்டிலேருந்து பார்க்கிறாங்க. நிறைய பேசணும் உன் கூட... அப்புறமா வர்றேன்'' என்றவன் ''எப்ப மதுரைக்கு திரும்புவே...'' என்று கேட்டான்.

''சாயந்திர பஸ்ஸுக்கு'' சொல்லிவிட்டு சேசாத்திரி வேகமாய் நடக்க அவன் ஒற்றையடிப் பாதையில் விலகி வேறு பக்கமாய் நடந்தான்.

அக்ரஹாரத்தின் நீண்ட வீடு. வரிசைகிரமமாய் அறைகள். திண்ணை பட்டாலை உள்ளறை... உக்ராயண அறை என்று...

பட்டாலையில் அத்தையின் அருகே ஓரமாய் உட்கார்ந்திருந்தான் சேசாத்திரி. அத்தைக்கு எழுபதுக்கு மேல் இருக்கும். சாக்குத் துணியில் தலைக்கு மணை வைத்துப் படுத்திருந்தாள்.

www.padippakam.com



ஓரமாய் அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

''எப்ப போனார்'' சேசாத்திரி கேட்டான். ''சனிக்கிழமை காலம்பற... குளிச்சார். பூஜை முடிச்சுண்டு காபி கொண்டாடி மங்கைன்னு வாய் நிறைய கூப்பிட்டார். வர்றதுக்குள்ளற போயிட்டார்.'' பேசிக் கொண்டிருந்த அத்தை நிறுத்தி விட்டு ஏறிட்டாள்.

''நீ ஏன் அன்னிக்கே வரலை''

''கேம்ப்.. திருச்சி போயிருந்தேன். அம்மா வந்தாளே''

அத்தை அழ ஆரம்பித்தாள்.

''உன்னை பத்தித் தான் அடிக்கடி பேசுவார். சேச்சுன்னு உயிரை விடுவார். தங்கை பையன்னு அப்படி ஒரு பிரியம். உங்க அப்பனும் போயிட்டான். இனி நேக்குன்னு யார் இருக்கறா''

''மாமா பட்டது போறாதோ.. மனுஷர் நிம்மதியா போய் சேர்ந்தார்''

யாரோ ஒருத்தி உள்ளேயிருந்து குரல் கொடுத்தாள். அத்தைக்கு கோபம் மூக்கு நுனிக்கே வந்துவிட்டது.

''எவடி அவள். நாக்கை ஒட்ட அறுத்துப்புடுவேன். பேசறது கள்... எவடி அவள்''

பட்டாலையில் அனை வருக்கும் மாமா அத்தையிடம் பட்ட பாடுநினைவுக்கு வர வந்த சிரிப்பை கஷ்டப்பட்டு அடக்கி கொண்டார்கள். அத்தை பேச்சை மாற்றினாள்.

''ஏண்டா பஸ்லேயிருந்து இறங்கி வர்றச்சே உன்னோட சின்னச்சாமி வந்தானாமே'' தலையாட்டினான் சேசாத்திரி.

அத்தை மோவாயை இடது தோளில் இடித்துக் கொண்டாள்.

''அது எங்கே வந்தது. வேலைக்குப் போகாத சுத்தறது. பொண்ணை சம்பாதிக்க விட்டு திங்கறது...'' என்றவள்.

''ஏண்டா பணம் ஏதும் கேட்டானா'' என்று மெதுவாய் கேட்டாள்.

''இல்லை...'' என்று உதட்டைப் பிதுக்கினான்.

''கொடுத்திடாதே... குடிக்க அலையறது. ஏற்கனவே இரண்டு வருஷம் முந்தி மதுரைக்கு வந்து இருநூறு ரூபாய் வாங்கினதாமே. யாருக்கெல்லாமோ வர்றது. அதுக்கு வரப்படாதோ... அண்டவிடாதேடா... தரித்திரம்.''

சேசாத்திரி தலையசைத்தான்.

''நீ போய் சாப்பிடு! இன்னிக்கே போகணும் சொன்னியே...''

சேசாத்திரி எழுந்து உள்ளே போனான்.

சாப்பிட்டு முடிக்கப் போகும் வேளை வாசலில் யாரோ சப்திக்கும் குரல் ''அவனை ஏன் பார்க்கணும். தூங்கறான்

www.padippakam.com



களைப்பா... போ...''

யாரையோ விரட்டும் தொனி..

சின்னச்சாமியாய் இருக்குமோ... உற்றுக் கேட்டான்.

''எப்ப புறப்படுவான்''

''அதென்ன... வான்... மரியாதை இல்லாத... நீயெல்லாம் மனுஷன்னு அலையற பாரு'' அப்புறம் சப்தமில்லை.

அவன் போயிருக்க வேண்டும்.



சேசாத்திரி எழுந்து கை அலம்ப சென்றான்.

''கடன்காரி அவள். உங்கப் பனை வளைச்சு போட்டுண்டா. அவனைத் தான் கட்டிப்பேன்னு உண்டாயிட் டேன்னாள். பஞ்சாயத்திலே பேசி சுளையா ஆயிரம் பெரிய நோட்டு உன் தாத்தா... எங்க அப்பாதான் கொடுத்தார். பல்லை காட்டி வாங்கிண்டவள் எவனையோ கட்டிண்டாள். அவனும் ஓடிட் டான். பெத்து போட்டுட்டு செத்தாள். இப்ப சீரழியறது''

அத்தை என்றோ சொன்ன வாசகம் நினைவுக்கு வர இனம் புரியாத உணர்வில் பெருமூச்சு விட்டான்.

தெரிந்தும் தெரியாமலுமாய் மூன்னூறு ரூபாய் வரை கொடுத்தவன் தான்... இன்று வரும் வருமானம் தன் குடும்பத்திற்கே பற்றவில்லை... இந்நிலையில் இப்போதும் பணம் கேட்கத்தான் வந்திருப்பானோ... கேட்டால் முகம் சுண்டி பதில் சொல்ல நினைத்துக் கொண்டான்.

பொழுது சாய ஆரம்பித்தி ருந்தது. ஐந்தரை மணி பஸ்ஸுக்கு இப்போதே புறப்பட்டால் தான் இரவு மதுரைக்குப் போய் சேர முடியும்.

புறப்பட்டபோது அத்தை உள்ளிருந்த படியே குரல் கொடுத்தாள்.

''அடிக்கடி வந்து போ. லெட்டர் போடு. சின்னச்சாமி பயல் வந்தா செருப்பால அடி...'' என்றாள்.

தலையாட்டியபடி நடக்க ஆரம்பித்தான். மணி ஐந்து கூட ஆகவில்லை. ஒரு வேளை அவன் விலக்கு ரோட்டிற்கே வந்தாலும் வருவான். மாற்றுவழியில் பக்கத்து கிராமத்திற்குப் போய்விட்டால் பஸ் அங்கே ஐந்து நிமிடம் நிற்கும். அவனும் வரமாட்டான். வேகமாய் நடக்க ஆரம்பித்தான்.

பஸ் புறப்பட்ட இன்னும் மூன்று

www.padippakam.com



நிமிடங்கள் இருந்தது. தற்செயலாக வெளியே எட்டிப் பார்க்க சின்னச்சாமி வியர்த்து வடிய... மூச்சு இளைக்க வந்து நின்றான். சேசாத்திரி முகம் மாறியது. காலில் புண் என்றானே... ஓடி வந்திருக் கிறானே... காலைப் பார்த்தான்.

வேஷ்டியை பாதத்திற்கு மேல் தூக்கிக் கட்டியிருந்தான். கட்டுத் துணியையும் மீறி ரணத்திலிருந்து ரத்தம் புறப்பட்டு வந்து கொண்டிருந்தது. சேசாத்திரி மனம் திடுக்கிட்டது.

''தன்னைப் பார்க்கவா இப்படி ஓடிவந்தான். பணம் கேட்கத் தான் இருக்குமோ. எப்படி இல்லை யென்று சொல்வது... கேட்கு முன்பே பத்து இருபதைக் கொடுத்து விட்டால்...'' மனத் திற்குள் நினைத்துக் கொண்டான். ''இப் படி வலியோடவா ஓடி வந்தீங்க''

அவன் புன்னகைத்தான்.

''பரவாயில்லை சேச்சு. நீ இந்தப் பக்கமா போறதா சொன்னாங்க. பஸ் நம்ம ஊரிலே நிற்காத போயிடும்னு நினைச்சியா. கண்டிப்பா நிற்கும். மதியத்தி லேருந்து விலக்கிலே இருந்தேன். கேள்விப்பட்டதும் ஓடிவந்தேன்'' கலங்கிய கண்களிலிருந்து வடிந்த நீரை கை துண்டால் துடைத்துக் கொண்டான்.

பணம் கேட்டுவிடுவானோ... பஸ் புறப்பட்டு விடக் கூடாதா என்று கூடத் தோன்றியது.

''சேச்சு...'' சின்னச்சாமி மீண்டும் கூப்பிடும் போது டிரைவர் பஸ்ஸுக்கு உயிரூட்டி இருந்தார்.

''அப்ப நான் போயிட்டு வர்றேன். நீங்க புறப்படுங்க'' என்றான் சேசாத்திரி.

சட்டென்று கையிலிருந்த பொட்டலம் ஒன்றையும் கவரையும் அவன் கைகளில் திணித்தான் சின்னச்சாமி.

சேசாத்திரி விழி சுருங்கியது.

''சேச்சு அதிலே பிஸ்கட் இருக்கு. குழந்தைக்கு. கவர்லே உன் கிட்டே வாங்கின பணம் முன்னூறு இருக்கு. கொஞ்சம் கொஞ்சமா சேர்த்தேன். அத்தை கிட்டே கொடுத்திருப்பேன். செல வழிச்சிடும். உன்கிட்டே தராது. எப்படியும் வருவேங்கிற நம் பிக்கை. என் கஷ்டம் என்னோட. மரியாதை கொடுத்து பேசினியே. எப்படி சாப்பிடறீங் கன்னு கவ லையா கேட்டியே... அந்த மனசு... அந்த அன்பு அது போதும்...'' பஸ் நகர ஆரம்பித்தது.

சேசாத்திரி கல்லாய் சமைந்திருந்தான்.

''மறந்திடாதே சேச்சு... எனக்குன்னு யாருமே இல்லை... மறந்திடாதே சேச்சு...'' அவன் கத்திக் கொண்டே நின்றான்.

சேசாத்திரி அவனைப் பார்க்கும் சக்தி அற்றவனாய் தலையைக் குனிந்து கொண்டான்.

பஸ் தன் வழியே போய்க் கொண்டிருந்தது. ○


படிப்பகம்

www.padippakam.com

# ம.சிங்காரவேலரின் 50வது ஆண்டு நிறைவு

## ஆர்.நல்லகண்ணு

இந்தியநாடு அடிமைப்பட்டுக் கிடந்தது. பஞ்சமும் பட்டினியும் மக்களைச் சூறையாடியது. சாதிச் சண்டைகளும் மதமோதல்களும் மக்களை ஒன்று சேர்ந்து விடாமல்



தடுத்து வந்தன; எதிர்காலத்தில் வாழ்வைப் பற்றியே சிந்திக்க முடியாமல் விதியை நொந்தே மூடத் தனத்தில் மூழ்கிக் கிடந்தனர்.

தமிழ் மக்கள் பிறந்த மண்ணில் பிழைக்க வழியில்லாமல் ஒப்பந் தக் கூலிகளாக உலகின் பல நாடுக ளுக்குச் சென்று குடியேறினார்கள்.

இந்நிலை கண்டு ஒரு சிலர் சிந்திக்கத் தொடங்கினர்; வங்கத்தில் விவேகானந்தர், தமிழ கத்தில் வள்ளலார் போன்றவர்கள் மனம் நொந்து வேதனைப் பட்டார்கள். ''எழுமின்; விழிமின் இலக்கை அடையும் வரை அயராது உழைமின்'' என்று விவேகானந்தர் குரல் கொடுத்தார்.

''வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன்'' என்றும் கருணையிலா ஆட்சி கடுகி ஒழிக! எனும் தன்து மனவெதும்பலை வெளிப்படுத்தினார்.

இவர்களுக்குப் பின்னர் தோன்றிய பாரதி ''என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்'' என்று பாடி மக்களைத் தட்டி எழுப்பினார்.

ஆங்கிலப் படிப்பு பெற்றவர்கள் சிலர் தலைமையில் காங்கிரஸ் மகாசபை உருவாகி வெள்ளைக் காரர்களைப் போல் தங்களுக்கும்

www.padippakam.com



வேலை வேண்டும் என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு விண்ணப்பம் கொடுத்தனர். இந்தியாவுக்கு கனடா, ஆஸ்திரேலியா போல் குடியேற்ற நாட்டு அந்தஸ்து போதுமென்று கெஞ்சினார்கள்.

இத்தகைய அரசியல் சூழலில் 1923ல் கயாவில் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு நடைபெற்றது. அதில் ஒரு குரல் ஒலித்தது; தலையில் தலைப்பாகையும், கழுத்தைச் சுற்றி உத்தரீயமும் அணிந்து அறுபது வயதான முதியவர் ''காம்ரேட்ஸ்'' என்று அழைத்துப் பேசத் தொடங்கினார். ''கனவான்களே'' எனும் இடத்தில் ''காம்ரேட்ஸ்'' (தோழர்களே) என்பது புதிய பொருள் நிறைந்த சொல்லாக ஒலித்தது. படித்த இளைஞர்களுக்கு இச்சொல்லே ஒரு தெம்பை ஊட்டியது; ஆரவாரத்தோடு, கரவொலி கிளம்பியது. நாட்டுக்கு வேண்டியது அடிமை சாசனம் அல்ல; குடியேற்ற நாட்டு அந்தஸ்தல்ல; நாம் யாருக்கும் அடிமையல்ல; பரிபூரண சுதந்திரம்; தட்டுத் தளை இல்லாத முழு சுதந்திரம் (Full Independence) வேண்டும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்து முழங்கியவர் தமிழ்நாட்டுப் பிரதிநிதியாகச் சென்ற ம.சிங்காரவேலர் அவர்களாகும்.

1922, 1923ல் கிளம்பிய உரிமைக் குரல் 1929 வரை நிறைவேறாமல் மிதவாதிகளால் தடுக்கப்பட்டு வந்தது. 1929ல் லாகூர் மாநாட்டில் தீர்மானமாக நிறைவேறியது. 1930 ஜனவரி 26ல் சுதந்திர தினக் கோரிக்கையாக நாடெங்கும் கொண்டாடப் பட்டது; ஆண்டுதோறும் அந்நாளில் போர் முரசமாக நாடெங்கும் ஒலித்தது. நாடு விடுதலையடைந்ததும் 1950 ஜனவரி 26ல் நமது நாட்டுக்குரிய சட்ட சாசனத்தை அரசியல் நிர்ணய சபை நிறைவேற்றியது. அந் நாளையே குடியரசு தினமாகக் கொண்டாடி வருகிறோம்.

1925 டிசம்பர் 25ல் கான்பூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி துவக்கப்பட்டது. அந்நிகழ்ச்சியைத் தோழர் சிங்காரவேலர் தான் துவக்கி வைத்து உரையாற்றினார்.

விடுதலைப் போராட்ட வரலாறுகளில் இச்சம்பவங்கள் சொல்லப்படுவதில்லை; நாட்டின் விடுதலைக்கு வித்திட்டவர்; விடுதலைக்குப் பொருள் பொதிந்த கருத்தை நாட்டுக்கு அறிமுகப் படுத்திய மார்க்சிய அறிஞர் பெருமகன் ம.சிங்காரவேலர்.

சிங்காரவேலர் சென்னை மயிலாப்பூரில் மீனவர் குடும்பத்தில் 18-2-1860ல் பிறந்தார்; வழக்கறிஞராகப் பட்டம் பெற்றார்.


www.padippakam.com



தனது 86வது வயதில் 1946 பிப்ரவரி 11ல் காலமானார்.

தான் வாழ்ந்த காலத்தில் தமிழகத்தின் அனைத்துப் பிரச்சினைகளிலும் தலையிட்டுக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்; அதற்காகப் போராடியிருக்கிறார்; உழைக்கும் மக்களை- தொழிலாளர்களை சங்கமாகத் திரட்டிப் போராட்டங்கள் பல நடத்தினார்.

இந்தியநாடு ஆங்கிலேயருக்கு



அடிமைப்பட்டுக்கிடந்தது. 19வது நூற்றாண்டின் இறுதியிலும் 20வது நூற்றாண்டின் முற்பகுதியிலும் சுதந்திரப் போராட்டம் பல உருவங்களில் துளிர்விடத் துவங்கியது

இந்து மதத்தில் புறையோடி விட்ட சாதிக் கொடுமைகளை எதிர்த்து புத்தமதக் கருத்தைப் பரப்பினார்; அயோத்திதாஸ் பண்டிதர் என்பவருடன் சேர்ந்து பிரச்சாரம் செய்து வந்தார். 1902ல் லண்டனில் நடைபெற்ற புத்தமத மாநாட்டில் கலந்து கொண்டார். சாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு பற்றி கட்டுரைகள் எழுதினார். "பிரபஞ்சமும் கடவுளும்" 'பொதுடமை விளக்கம்' தத்துவ விஞ்ஞானக் குறிப்புகள், அரசியல் நிலைமை மற்றும் பல நூல்களும் எழுதியுள்ளார். நூற்றுக்கணக்கான கட்டுரைகள் பெரியார் நடத்திய குடியரசு இதழ்களிலும் தோழர் முருகேசனும் நாகை டி.என். ராமச்சந்திரனும் நடத்திய "புதுஉலகம்" பத்திரிகையிலும் வெளிவந்தன.

தமிழ்மக்களின் சிந்தனையில் படிந்து கிடந்த கருமேகங்களான மூடப்பழக்கங்களை விலக்குவதற்கு தேவையான அறிவியல் கருத்துக்களை - மார்க்சியக் கருத்துக்களைத் தமிழகத்தில் அறிமுகப்படுத்தினார்.

சிலர் அறிஞர்களாக இருப்பார்கள்; செயலில் ஈடுபடமாட்டார்கள். சிலரிடம் செயல் தீவிரம் இருக்கும்; அறிவைப் பெருக்கிக் கொள்ளமாட்டார்கள். சிலர் அனுபவ ஞானத்தையே அடித்தளமாகக் கொண்டு செயல்படுவார்கள்; சமூக விஞ்ஞானம்; அறிவியலைப் பற்றிய ஞானத்தைப் பெறமுயற்சிக்கமாட்டார்கள்.

www.padippakam.com



சிங்காரவேலர் அவர்கள் அறிஞராகவும், தொழிலாளி வர்க்கப் போராட்டத் தளபதியாகவும் விளங்கினார். பொருளாதாரப் போராட்டங்களோடு நின்றுவிடாமல், விடுதலைப் போராட்டத்திலும் பங்கு கொண்டார்; சமூகப் பிரச்சினைகளின் தீர்வுக்கும் முயற்சி எடுத்தார்.

1928ல் "தென்னகத்தைக் கலுக்கிய பத்து நாட்கள்" என்று பாராட்டப்பட்ட நாகை ரயில்வேத் தொழிலாளர் போராட்டத்துக்கு சிங்காரவேலர் தலைமை தாங்கினார். இதனால் இவருக்கு பத்தாண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

1923ல் இந்தியாவிலேயே முதன்முதலாக சென்னையில் 'மே தினத்தை" நடத்தினார். மாமேதை லெனின் மரணத்தையொட்டி இரங்கல் கூட்டத்துக்கு அகில இந்திய காங்கிரஸ் ஒப்புதல் தரவில்லை. சிங்காரவேலர் சென்னை கடற்கரையில் இரங்கல் கூட்டம் நடத்தினார். லெனின் காலத்தில் வாழ்ந்தவர். லெனின் சிங்கார வேலரைத் தெரிந்து வைத்திருந்தார் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. பெரியாருடன் சேர்ந்து சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபட்டார். சுயமரியாதை சமதர்ம கட்சியைத் துவக்கினார். ஜீவாவும் இந்த இயக்கத்தில் முழுமூச்சுடன் செயல்பட்டார்.

தமிழ்நாட்டில் நடைபெற்ற தத்துவப் போராட்டங்கள், அரசியல் போராட்டங்கள், விடுதலைப் போராட்டங்கள் அனைத்திலும் பங்கு கொண்டு செயலாற்றி வந்தார்.

பொதுவுடமை இயக்கம் தனித்த ஒரு சார் இயக்கம் அல்ல; மக்களின் ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்கு வழிகாட்டும் இயக்கம் என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர் சிங்காரவேலர்.

விடுதலை இயக்கம் பகுத்தறிவு, சுயமரியாதை, தொழிலாளி வர்க்கப் போராட்டம், மார்க்சிய விஞ்ஞா னம்-ஆகிய பரிமாணங்களை உள்ளடக்கிய மாபெரும் சிந்தனையாளர்-சிங்காரவேலரின் 50வது ஆண்டு நிறைவு விழாவைத் தமிழகம் எங்கும் சிறப்பாகக் கொண்டாடுவோம்! அவர் கருத்தைப் பரப்புவதோடு லட்சியத்தை நிறைவேற்ற உறுதி கொள்வோம்!

—

படிப்பகம்

www.padippakam.com

# பீச்சாங்குழல்

## ஜெகாதா

வர்ணம் உதிர்ந்து போனது போலிருந்தது. ஆனாலும் பிராயத்து ஜோடிக்காளைகள் போல அந்தக் கோலாட்டம் குச்சிகள் இன்னும் வசீகரம் இழந்ததாகத் தெரியவில்லை நீலாவுக்கு.

'பசவண்ணா கொலு' கோலாட்ட உற்சவத்தின் போது தன்னோடு ஓடிவந்த திருவாங்கூர்காரி சொர்ணகுமாரிக்கு தன் உறவுக்கார பட்டுநூல்காரப் பெண்கள் பாசம் பொங்க விருந்துபசரித்து கொடுத்தது அது. இப்பொழுது நினைத்தாலும் கண்ணோரம் கசிந்தது.



வைகை ஆற்றங்கரையின் வடகரையில் உள்ள தன்னுடைய நெசவுப் பட்டறைக்கு அந்த மலையாளத்துப் பெண்ணை கூட்டிக் கொண்டு வந்தபோது பட்டுநூல்காரர் பட்டறையே 'ஆ'வென வாய் பிளந்து அளவெடுத்தது. வேடிக்கையாயிருந்தது.

ஆனாலும் அந்தப் பெண்கள் எல்லாம் மணமகளுக்குரிய அழகு சாதனப் பெட்டியான 'ஸம்சுடாபொடி' ஏந்திக் கொண்டு அன்றைக்கு மாலையிலேயே சொர்ணகுமாரியை சூழ்ந்து விட்டது நினைவுக்கு வந்தது.

இப்பொழுது தன்னுடைய இடிந்துபோன மச்சுவீட்டில் பக்கவாதம் கொண்ட தான் மட்டும் எப்படி மிச்சமோ அது போலவே அந்தப்

படிப்பகம்

www.padippakam.com



பெட்டியில் வர்ணம் உதிர்ந்து போன அந்த கோலாட்டக் குச்சிகள் மட்டும் மிச்சமாக இருப்பதை எண்ணி நீலாராவுக்கு நெஞ்சு கலங்கியது.

சொர்ணகுமாரியின் வெற்றிடத்தை நினைவூட்டுவதற்கு இந்த கோலாட்டக் குச்சிகள் போலவே அவருக்கு இந்த ஊரில் இன்னும் ஒன்றும் உண்டு.

அது சுதர்சனன் ஒன்பது வயது அமாவாசை காடெல்லாம் திரியும் தறிகெட்டு, எப்பொழுதாவது தென்படும். இளநீர் வழுக்கலாய் கண்குழம்ப இடிந்த ஜன்னல் வழியே எட்டிப்பார்க்கும். பக்கவாதத்தையும் மீறி நீலாராவ் அருவெறுப்புடன் மறுபுறம் திரும்பிப் படுக்க முயற்சிப்பார் அப்போதெல்லாம்.



'கோர்ஹா' என்று நீலாராவ் எல்லோரையும் சும்மா இருக்கச் சொன்னாலும் அவ்வப்போது சுதர்சனனுடைய நடமாட்டம் பற்றிய செய்தியை ஜன்னல் வழியே பலரும் வீசிவிட்டு செல்வது வழக்கமாயிருந்தது. உறவுவிட்டுப் போகாதாம். இப்பொழுது கூட பெருமாள் கோயில் ட்ரஸ்ட்டி ராமாச்சாரி 'ஓய் நீலாராவ் அதோ பாரும்

படிப்பகம்

www.padippakam.com



உம்ம புள்ளையாண்டான் அழகா மாட்டுச்சாணியை பொறுக்கிட்டு ஓடுறான் ப்ாரு' என்று கூறிவிட்டுத்தான் சென்றார்.

விசனத்தோடு திரும்பிய நீலாராவின் கண்கள் மீண்டும் அந்த 'ஸம்சுடா பொடி'யில் நிலைத்தது.

நேரத்துக்கொரு அலங்காரம், இயல்பாகவே மலையாளத்துக்காரிகளுக்குரிய சிங்காரமும் சிருங்காரரசமும் சொர்ணகுமாரிக்கு இரட்டிப்பாக இருப்பது போல பல நேரம் தோன்றும் வெளிப்படையாகவே பலரும் சொல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

நீலாராவ் முழுக்க முழுக்க அவளுடைய மையலில் புதையுண்டு போனார் என்பதுதான் அப்பொழுதெல்லாம் பேச்சே.

வைகை கரையில் வடகரையில் அவரது நெசவுப்பட்டறைதான் பிரசித்தி. வெள்ளைக்காரன் பாஷையில் சொன்னால் 'மாஸ்டர் வீவர்' அவர் நூறு பேர் அவரது பட்டறையில் தறி அடிப்பார்கள் பாண்டிச்சேரி, தரங்கம்பாடி கண்ட வரை மங்லின் பனாரஸ் அவரிடம் கும்பிடு போட்டு வாங்குவார்கள்.



இராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி மன்னர் அரண்மனையில் அந்தப்புரம் வரை அவரது செல்வாக்கு நீளும். சேதுபதி மன்னர் மீது அவர் கொண்டிருந்த மூர்க்கமான ராஜாங்க விசுவாசத்தில் பட்டுநூல்காரர்கள் பலரும் இவருக்கு பெட்டிப் பாம்பு. அப்பேர்ப்பட்டவர் திருவாங்கூரில் பட்டு வியாபாரத்தில் சொர்ணகுமாரியிடம் தன்னையே அடகு வைத்து இப்படி திரும்புவார் என்று யார்தான் எதிர் பார்த்தார்கள்.

எப்பொழுதும் வியாபாரம் முடிந்து வைகை ஆற்றின் தென் கரையிலிருந்து நீலாரான் வீடு திரும்புவதை தூரத்திலேயே ஆசையுடன் பார்த்து விடுவதற்கு வசதியாக, உயரமான மச்சு வீடு வேண்டும் என்று அவள் சொன்னமாத்திரத்திலேயே, பெருமாள் கோவில் துவஜஸ்தம்பம் நெற்றியில் தட்டுவதுபோல மாடம் வைத்து வடகரையிலேயே உயரமான மச்சுவீடு கட்டிக் கொடுத்தார் நீலாராவ்.

அந்த மாடத்திலிருந்து கொண்டுதான் புருசன் வருவதை

www.padippakam.com



கண்காணித்தபடி சமஸ்தானத்து ஆட்களுடன் அந்த மலையாளத்துக்காரி சல்லாபத்தில் இறங்கி விட்டாள் என்று பின்னர் கதை கதையாய் முளைக்க ஆரம்பித்து விட்டது.

சுதர்சனன் பிறந்தபோதே நீலாராவுக்கு அந்த சந்தேகம் வலுத்து விட்டது.

''நொவ பொதோ ஸொவ் குணங்கோ'' (நீங்கள் தனியாக ஒரு முடிவுக்கு வர வேண்டாம்) என பெருமாள் கோயில் டிரங்டி ராமாச்சாரி எத்தனையோ முறை எச்சரித்தும் நீலாராவ் சொர்ணகுமாரியிடம் கேட்டே விட்டார். சுதர்சனன் சந்தேகத்துக்கு பிறந்த குழந்தையானான்.

திருவாங்கூர்காரி நீலாராவிடம் அதன் பின்னர் எதுவும் பேசவில்லை. 'க் ஹல்லஜா' என எவ்வளவோ விரட்டியும் தொட்டிலில் கிடந்த பிள்ளைக்கு பால் ஊட்டக் கூட மாடத்தை விட்டு கீழே இறங்கி வருவதாயில்லை அவள்.

கீழே நெசவுப்பட்டறை ஒரு புறம் மர அட்டளைரேக்குகளில் சலாம்பூர் மஸ்லின் துணிரகங்களும் கரைப்பட்டுகாரை, ஜரிகை உல்லன், சூரத் பவுடர், கச்சர் பட்டுகளும் கலைந்து போன காரை நூல் சிட்டங்களுமாய் இரைந்து கிடக்கும் மறு அறை. இன்னொரு புறம் சாயப்பட்டறை. சாயப்பட்டறையில் சிந்தாமணி சாயம் பிழிந்து ஓடி கரைபடிந்த தூம்பு வாய்க்கால் வறண்டு போய்க் கிடந்தது. முன் நெசவுப்பட்டறை நூல்ாம் படைபிடித்துக் கிடந்தது. மயில் கழுத்துக்கலருடன் சம்பங்கி கலந்து ஒரு தறியில் ஓடியிருந்த பாவு அரைகுறையாய் அப்படியே தூசடைந்து கிடந்தது.

நீலாராவின் நெசவுப்பட்டறையில் தறி அடிக்கும் சத்தம் கேட்டே ரொம்ப காலமாயிற்று. நீலாராவுக்கும் சொர்ணகுமாரிக்கும் பிரச்சினை ஆனதிலிருந்தே தறிக்காரர்களும் சாயப்பட்டறைகாரர்களும் மடிக்கூலிகாரர்களும் அங்குவருவதை நிறுத்திவிட்டனர். நீலாராவ் பொழுதோடு பெருமாள் கோயில் சுதர்சன ஆழ்வார் சன்னதியிலேயே நிம்மதிதேட ஆரம்பித்த பிறகு கூலிக்காரர்களுக்கு கூலி வேண்டாமா?

நீலாராவ் கேட்டுவிட்ட கேள்வியில் பெற்ற குழந்தையைக் கூட வெறுத்து விரோதம் பாராட்டி மனம் இறுகிப் போய் மாடத்தை விட்டு அந்த மலையாளத்துக்காரி இறங்காமல் இருக்கிறாளே என்று விக்ராந்தியாகிப் போனார் நீலாராவ்.

ஊரே சித்திரைத் திருவிழா சந்தடியில் இருந்த அந்த இரவில் எங்கோ சுற்றித் திரிந்து விட்டு வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தபோது

www.padippakam.com



தன்னுடைய நெசவுப் பட்டறைக்குள்ளிருந்து தீ நாக்குகள் புகை வளையங்களுடன் வானத்தில் பேயாட்டம் பரவிக் கொண்டிருப்பதை தூரத்திலேயே பார்த்து விட்டார் நீலாராவ்.

திடுக்கிட்டுப்போய் நெஞ்சம் பதைப்பதைக்க ஓடி வந்தவருக்கு வீட்டுக்கருகே வந்ததும் கால் இழுத்துக் கொண்டது. படீரென கீழே சாய்ந்து விட்டார்.

முச்சுவீடும் நெசவுப் பட்டறையும் ஜாஜ்வல்யமாய் எரிந்து கொண்டிருக்க மாடத்திலிருந்து எரியும் நெருப்பில் சொர்ணகுமாரி குதிப்பதை பார்த்து 'அய்யோ'வென அலறினார். வீட்டைப் பூட்டிக் கொண்டு நெசவுப் பட்டறைக்கு தீ வைத்து அந்த நெருப்புப் பொதிக்குள் அவள் அப்படிக் குதித்து விட்டதை யாராலும் தடுக்க முடியவில்லையேயென ஊரே ஒப்பாரி வைத்தது. நீலாராவால் அந்த மலையாளத்துக்காரியின் கருகிய சடலத்தை காணச் சகிக்கவில்லை.



நல்ல வேளை குழந்தை சுதர்சனனை மட்டும் பக்கத்து வீட்டு கிழவியின் பராமரிப்பில் நீலாராவ் விட்டிருந்ததால் அவன் தப்பித்தான்.

எரியும் நெருப்புப் பிரவாகத்தில் தன்னுடைய நெசவுப் பட்டறையும் சொர்ணகுமாரியும் கருகிப் போன நாளில் பக்கவாதத்தில் விழுந்தவர் தான் நீலாராவ்.

அவருக்கு வந்த பக்கவாதமும் அந்த மலையாளத்துக்காரி செய்து விட்டுப்போன 'செய்வினை'-யின் மாந்திரீகத் தன்மையினால் தான் என்று அவருடைய காதில் பலரும் ஓதத் தொடங்கிவிட்டனர். நீலாராவுக்கும் அது உண்மையாக இருக்குமோ என்று சஞ்சலம் ஆட்டிப் படைத்தது. வளர்ந்து வரும் சுதர்சனன் மீது மேலும் வெறுப்பு வளரவும், மனவளர்ச்சி குன்றியவனைப் போல அந்தச் சிறுவனது அலைச்சலையும், அதனாலேயே அவர் தடுக்கவும் முற்படவில்லை.

துப்புவதற்கு வாய் நிறைந்த வெற்றிலை எச்சில் மேலே தூக்கிய கீழுதட்டையும் மீறிததும்பவும், சன்னல் வழியே ஆந்தினார் நீலாராவ்.

'கோவிந்தா நல்லா வெள்ளையனும்னு இரை எடு கோவிந்தா' அழகர் மாட்டுக்காரன் வீடுவீடாய் கூவி வருவதைப் பார்த்தார் நீலாராவ்.

www.padippakam.com



நல்ல வேலைப்பாடு செய்த வர்ணப் போர்வையும் கொத்துமணிகளும் தொங்க, அழகான முகப்படாமுடன் வர்ணக்கொம்பு மணியையும் கால்சலங்கைகளையும் ஆட்டிக்கொண்டு அழகர் மாடு அவன் சொல்லச் சொல்ல தலையாட்டியது.

கை இடுக்கில் பெரிய முறுக்குத்திரி ஏந்தியபடி அழகர் மாட்டுக்காரன் தானிய கோணிப் பையை ஒரு கண்ணிலும் நெசவுப்பட்டறை வாசல்களை மறுகண்ணிலும் லாந்த விட்டுக் கொண்டே வந்தான்.

''கோவிந்தா நல்லா வெளையனும்னு ஆத்தா வீட்ல இரை எடுத்துக்கோ''.

''பட்டு நூல்காரத் தெருவில் விளைச்சலுக்கு யார்ப்பா மனுப்போட்டது. பட்டி தொட்டிகள்ள சொல்ற பாடத்தையே இங்கயும் சொன்னா எப்படி''

பூம்பூம் மாட்டை வேடிக்கை பார்த்தபடி அதோடு ஊரை சுற்றி வந்த பட்டுநூல்காரப் பையன்களுக்கு குஷிதாங்க முடியவில்லை. அதைக் கேட்டு கொல்லென சிரித்துவிட்டனர். அழகர் மாட்டுச் சாணியைப் பொறுக்கிக் கொண்டு சுதர்சனன் திரிந்தான் என்று ராமாச்சாரி கொஞ்ச நேரத்துக்கு முன்னால் சொன்னாரே என்று அவனை அந்தக் கூட்டத்தில் நீலாராவ் தேடினார், அவனைக் காணோம்.

அழகர் மாட்டுக்காரன் அசந்த நேரம் பார்த்து மாடு மீது போர்த்தியிருந்த போர்வையில் தொங்கிய மணியை ஆட்டி ஆட்டி ஓடியது அந்த சிறுவர் பட்டாளம்.

அந்த மாட்டுக்கு அகலாத காவல் போல ஒரு ஈ மொய்த்தாலும் 'ம் ஹகி தொவ்டி' என்று கோரசாக அந்த பட்டு நூல்கார சிறுவர் கூட்டம் சத்தமிட்டு ஈ ஓட்டியது.

தறி அடிப்பதை நிறுத்திவிட்டு அந்த வேடிக்கையில் கலந்துகொள்ள பல நெசவுப் பட்டறைகளிலிருந்தும் பெரிய தலைகளும் நீளாமலில்லை.

''வெளைச்சல் இல்லாட்ட என்ன சாமி, நெசவு பெருகட்டும். இந்த வருச சித்திரைத் திருவிழாவுக்கு அழகரை சேவிச்சுக்கங்க கோவிந்தா கொடுப்பார். கோவிந்தா குடுப்பியா...''

அழகர்மாடு மணி குலுங்க தலையாட்டியது. ''அடிக்கற தறில பாதி வரில போகுதேப்பா, அதுக்கு கோவிந்தா என்ன செய்யும். தறி ஒன்றுக்கு நாலுகூழிப்பணம் வரி தெரியுமா? கோவிந்தா இருபைல வைகை கரையில அறுநூறு தறி பெருகிப் போச்சு வாஸ்தவந்தான் கப்பல் கப்பலா

www.padippakam.com




டச்சுக்காரனும் பிரஞ்சுக்காரனும் கும்பெனிக்காரனும்ல அள்ளிட்டுப் போறான்..''

அழகர் மாட்டுக்காரன் அவர்களுக்கு விபூதி கொடுத்துக் கொண்டே விடுவ்தாயில்லை.

''எல்லாம் அச்சய பாத்திரமா பெருகும் சாமி சித்திரைத் திருவிழா அழகரு ''பாவு'' பெருகச் செஞ்சு பட்டு நூல்காரவுங்க மனக் கஷ்டத்தை போக்கிடுவாரு...''

''யாபு பெருக பெருக வந்த கஷ்டம் தான் எல்லாம். பட்டு நூல்காரன்கதை ரெண்டு பொண்டாட்டிக்காரன் கதையா போச்சுபோ. இந்த சித்திரைத் திருவிழா முடியறதுக்குள்ளே தெரிஞ்சு போகும் வைகை கரைல எத்தனைபேரு தறியைப் போட்டுட்டு தறிகெட்டு ஓடப் போறாங்கங்கிறது. சேதுபதி ராசாவுக்கு தறி அடிக்கறதா கும்பெனிக்காரனுக்கு தறி அடிக்கறதான்னு, தெரியலை.''



''சாமி அப்படிலாம் சொல்லாதீங்க''

''நீ வாங்கற தானியத்தை வாங்கிட்டுப் போப்பா... உனக்கு வஞ்சகம் பண்ணவா சொல்றேன்...? நம்ம ராமநாதபுர சீமை முத்துராமலிங்க ராசாவுக்கும் கும்பெனிக்காரனுக்கும் தான் ஏழாம் பொருத்தமாயிடுச்சே. அது தெரியாதா உனக்கு? பத்து வயசில திருச்சிக் கோட்டைல கொண்டு போயி சிறையில போட்ட சேதுபதி ராசாவை நம்ம சீமை சனங்க கலகம் தாங்காம நவாபுக்காரனும், கும்பெனிக்காரனும் விடுதலை பண்ணி பொம்மை ராசாவா கொண்டு வந்து தந்திரமா உக்கார வச்சாங்க.''

''அதான் பழைய கதையாச்சே சாமி...''

''கும்பெனிக்காரனுக்கும் பீரங்கிக்குண்டுக்கும் பயப்பட மாட்டேன்னு சேதுபதி ராசா நிமிந்திட்டாரு தெரியுமா அதுதான் புதுக்கதை. பட்டு நூல்காரங்க பூராவும் எனக்குத்தான் தறி போட்டு நெசவு கொண்டாரதுன்னு அவரு உத்தரவு. கும்பெனிக்காரன் எனக்குத்தான் எல்லாரும் தறி போடனும்னு அவனும் உத்தரவு போட்டுட்டான். பட்டு நூல்காரங்களுக்கு வீடு வாசல் கட்டித் தர்றோம்னு ஆசை வார்த்தை வேற.

www.padippakam.com



கட்டுப்படாட்ட வைகைக் கரைல நெசவுப் பட்டரை பூராவையும் கொளுத்திப் போட்டுட்டுவரனும். சித்திரைத் திருவிழாவுக்கு அழகர் எதிர் சேவை பார்க்க கும்பெனிக்கார துரைச்சாணி எமிலிராபர்ட் வர்றானாம். எங்களுக்கு நாள் கணக்கு குறிச்சிட்டு போகப் போறானாம். யாரு பக்கம் சாயறதுன்னு தெரியாம சனங்க மயங்கிப் போயி கெடக்கு''

அவர்களுக்கெல்லாம் சமாதானமாக அழகர் மாட்டுக்காரன் திருநீரைக் கொடுத்து விட்டு வைகை ஆற்றை தாண்டிப் போய்க் கொண்டிருந்ததைப் பார்த்தார் நீலாராவ். நாளை மறு நாள் சித்திரை திருவிழாவுக்கு அழகர் மலைக்கு அந்த மாட்டைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டுமே அவன்.

திரேகம் பூராவும் பொதி பொதியாய் மணல் சுமந்து கை விரித்து மல்லாந்து கிடக்கும் பூதம் போல சித்திரை வேனலுக்கு வைகை ஆறு அப்படித்தான் வறண்டு போய்க் கிடந்தது.

சித்திரைத் திருவிழாவுக்கு அந்த வேனல் பெருமாள் தந்த போர்வை போல நினைத்து காந்தல் உணராமல் தேனடையாய் சுத்து பட்டு கிராமங்கள் பூராவும் அந்த ஆற்று மணலில் மொய்த்துக் கிடந்தது.

அழகர் ஆற்றில் இறங்கி வருவதை எதிர் சேவை செய்ய அந்த பகுதியில் தொண்டுரிமை பூண்டுள்ள பட்டு நூல்காரர்கள் புத்தாடை உடுத்தி பன்னீர் சந்தன மணம் கமழ பவ்வியமாய் குடும்பத்தோடு குழுமி இருந்தனர்.

கொதி மணலில் இறங்கி வெய்யிலில் வரும் அழகர் மயக்கம் தீர 'பீச்சாங்குழல்' வழியே மஞ்சள் கலந்த தண்ணீரை பீய்ச்சி அமிர்தவர்ஷினி செய்யும் வழக்கத்தில் பலரும் கைகளில் பீச்சாங்குழல் ை ஏந்தி நின்றனர்.

அழகரை சேவிக்க எதிர்பார்த்து கூட்டம் ஏங்கி நின்றது போலவே துரைச்சாணி எமிலிராபர்ட்டையும் எதிர்பார்த்து ஆவலுடன் பரபரத்து கிடந்தது.

அதற்கேற்றாற்போல தென்கரையிலிருந்து சாரியட்டிலிருந்து இறங்கி வெள்ளை மஸ்குலின் துணியில் ஒரு தேவ்தைபோல துரைச்சாணியை இறக்கி மேள தாளத்துடன் அழைத்து வந்து கொண்டிருந்தது ஒரு கூட்டம். அவர்கள் வீட்டில் தான் திருவிழா முடிந்துவிருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக பேசிக் கொண்டார்கள்.

நீல நிற பளிக்குக் கண்களும் வெயிலுக்கு தங்கமாய் பளீரிடும் கேசவளையங்களுடன் வசீகரித்த துரைச்சாணி தூரத்தில் வாண

படிப்பகம்

www.padippakam.com




வேடிக்கைகளுடன் வந்து கொண்டிருந்த அழகரை 'மவுசு' குறையச் செய்வது போல வந்து கொண்டிருந்தாள்.

ப ட்டு நூல் காரர்களது நாளைய வாழ்க்கையை நிர்ணயம் செய்யும் வசிய மந்திரகாரி போல திடும்மென பலருக்கும் ஒரு விதமான மயக்கம் மனதுள் அந்த நேரத்தில் பரவாமல் இல்லை.

குதிரை வாகனத்தில் ஆயிரம் பொன் சப்பரத்தில் மிக அருகே வந்துவிட்ட அழகரை நெருங்கிப் போய் மனதார சேவிப்பதா அல்லது தங்களை மாயவலையில் வீழ்த்த வந்திருக்கும் இந்த கும்பெணிக்காரரின் அருகில் நிற்பதா என்று தெரியாமல் பட்டு நூல் காரர்களது கூட்டம் அலை மோதியது.

துரைச்சாணி எமிலிராபர்ட் தீப்பந்தமும் கற்பூர ஜோதியும் சூர்ய ஒளியும் ஒரு சேர மிளிர வைகை ஆற்றின் கொதி மணலில் எதிரி வந்து விட்ட அழகரையும் வாண வேடிக்கையினையும் ஒரு வித பிரமிப்புடன் பார்த்து அயர்ந்து போய் நின்ற போது தான் 'அது' நிகழ்ந்தது.



'துரைச்சாணி மேல சாணி துரைச்சாணி மேல சாணி' என்று ஒருவர்பின் ஒருவராய் கூட்டம் கூவியது.

வெள்ளை தேவதையாய் நின்று கொண்டிருந்த துரைச்சாணி அப் படியே திடுக்கிட்டுப் போனாள். தன்னுடைய வெள்ளை உடுப்பும் உடம்பும் சாணிக்கரைசலில் தெப்பலாய் வர்ஷிக்கப்பட்டு விட்டதையும், அந்த நாற்றத்தையும் உணர்ந்து வெகுண்டு போனாள்.


ஆட்டுத் தோலால் செய்த பீச்சாங்குழல் பையில் நிரப்பிய மஞ்சள் நீரை அழகரை நோக்கி பலரும் பீய்ச்சிக் கொண்டிருக்க அந்த சிறுவன் நீலாராவின் மகன் சுதர்சனன் பீச்சாங்குழலில் நிரப்பிய சாணிக்கரைசலை துரைச்சாணி மீது பீய்ச்சிக் கொண்டிருந்தான்.

அப்படியே ஒரு கனம் அவமானத்தில் துரைச்சாணி குன்றிப்போன நேரத்தில் துரைச்சாணிக்கு காவலாய் நின்று கொண்டிருந்த கும்பெனியர் சுதர்சனனை கசாப்புக்கடைக்கு குட்டி ஆட்டைத் தூக்கிக் கொண்டு போவதைப் போல தூக்கிப் போய் விட்டனர்.

பட்ட நூல்காரர்களுக்கெல்லாம் சித்திரைத் திருவிழா சந்தோஷம்

www.padippakam.com





உன்னைச் சந்திப்பதை
முன்னரே அறிந்திருந்தால்
என் நந்தவனங்களின் சருகைக்கூட
யாருக்கும் தராமல்
நுழைவாயில் மல்லிகைப்பந்தலில்
நின்றிருப்பேன்

மீளாத கடனுக்காய்
விற்பனைப்பத்திரங்களில்
கடைசிக் கையெழுத்தைப் போட்டுவிட்டு
நிமிர்ந்து பார்க்கிறேன் நீ நிற்கிறாய்

ஆயினு மென்ன
இரவோ பகலோ
பெய்யத்தான் பெய்யும் மழை

-நீலாம்பரி

வயிற்றுக்குள்ளிருந்த படிரென் வெளியேறிவிட்டது. துரைச்சாணி நெசவுப் பட்டறைக்கு வரவில்லை. திரும்பிப் போய்விட்டாள்.

நீலாராவுக்கு கொள்ளி வைக்க பிள்ளை திரும்புவானா என்ற சந்தேகத்திலும் அவன் ஏன் அப்படிச் செய்தான் என்ற குழப்பத்திலும் ஆற்று மணலில் அவன் விட்டுச் சென்ற அந்த பீச்சாங்குழலை மட்டும்எடுத்துக் கொண்டு வந்து நீலாராவிடம் கொடுத்துவிட்டு ஒரு ஒப்பாரியே வைத்துவிட்டு சென்றனர் பக்கத்து பட்டறைக் காரர்கள்.

நீலாராவுக்கு உடம்புக்கு இன்று தான் பக்கவாதம் வந்தது போல அதிர்ந்தது.

எரியும் நெசவுப்பட்டறைக்குள் தீக்குளித்து தன்னுடைய பத்தினித் தன்மையை அந்த திருவாங்கூர்க்காரி காட்டிய போதும் மனத் தெளிவடையாது இதுநாள் வரை சந்தேகத்தின் குழந்தையாக ஒதுக்கி வைத்திருந்த அவன் நிஜமாக தன் பிள்ளைதான் என்று நீலாராவுக்கு இப்போது உறுதிப்பட்டது.

சாணநீர் ஒழுகிக்கொண்டிருக்கும் அந்த பீச்சாங்குழலில் கும்பெனியரை எதிர்த்து ஓடியபோது ராஜ விசுவாசம் தெரிந்தது அவருக்கு.

சுதர்சனனுடைய அந்த பீச்சாங்குழல் பீரங்கியைப் போல தன் கால் மாட்டில் கிடப்பதை உணர்ந்தார் நீலாராவ்.

www.padippakam.com

கடித இலக்கியம்

# ஆயன் கடிதங்கள்

உக்கானைப் பற்றி நீங்கள் தெரிந்திருக்க நியாயமில்லை. ஒரு சாயலி அவனைப் பார்த்தால், உண்மை அவனுள் ஒளிந்து கொண்டிருப்ப போல் தோன்றும். மாரியம்மன் கோவில் பூஜாரி. வயது 15 தான் இன்னும் மீசை முளைக்கவில்லை. சிறுவன் எப்படி பூஜாரியா



இருப்பான் என்று நீங்கள் நினைக்கலாம். அவன் பெரியப்பாதான் இந்த பதவியை வகித்தவர். அவர் காலாவதியான பிறகு, இவன் பதவி பிரமாணம் செய்து வைக்கப்பட்டான்.

மாலை வேளைகளில் - மஞ்சள் வெயில் - நீலமாய் மேகங்களினூடே ஒரு ஒற்றைப் பனை மரத்தின் துணையோடு மாரியம்மன் கோவி காண்பதற்கு அற்புதமாய் இருக்கும். சில வேளைகளில் வெளியூர் காரர்கள் பொங்கல் வைக்க வரும்போது -உக்கான் பம்பரம் விளையாடி கொண்டிருப்பான். ரோட்டோரத்தில், ஓடிப்போய் நடை திறந் வேண்டியதைச் செய்து -அந்தச் சூழ்நிலைகேற்ப மாறிவிடுவான் கழுதைச் சவாரி செய்யும் போது அந்தச் சூழ்நிலையிலும், பம்பர விடும்போது அதன் ரசனையிலும், ஒரு நாய்க்கு கஞ்சி ஊற்றிக்கொண்

www.padippakam.com



அதனுடனும் பேசுவான்: மாரியம்மன் கோவில் வரும் மெய்யன்பர்களுக்கு எலுமிச்சம்பழம் மந்திரித்துக் கொடுப்பான்.

நிறையப்பேர் எலுமிச்சம் பழத்தோடு அவனைத் தேடி வருவார்கள். புரட்டாசி மாதம் கோவில் வேலைகளைக் கவனிக்கவே சரியாக இருக்கும். அப்போது அவுன் சாமி ஆடுவான். விரதம் இருப்பான் - வச்சை மூச்- துண்டுகூட விரித்துப் படுக்கமாட்டான். ஒரு மேட்டில் கோயில். ஒத்தைப்பனை. ஒருபயமான தோற்றத்தை உருவாக்கும். மா.வி.ஆன பெண்கள் அந்த வழிபோவதில்லை.ஒரு தடவை பெந்தயகோஸ்தேகாரர்கள் பாட்டுப் பாடிக்கொண்டு சுவிசேஷங்களை சொல்லிப் போனதை ஆவலாகப் பார்த்தான். அவன் எதிலும் வித்தியாசம் தெரியாதவன். உக்கான்இத்தனைக்கும் சரியாகப்பேசவராத ஊமை கலந்த மழலை.

ஓ! அவன் இன்னும் என்னுள் வாழ்கிறான். அவன் கண்களை என்னால் மறக்கமுடியவில்லை. நீங்கள் யாரும் பேசும் கண்களை பார்த்திருக்கிறீர்களா?

2

இன்று காலை அகஸ்து மாஸ்தாக இந்தப் பூவை வெளியே போகும் போது குளக்கரைப் பக்கம் சரிவில் பார்த்தேன். பதநீர் காய்க்க கொரண்டிச் செடியை இந்த மாதத்திலிருந்து தெக்கத்திச் சீமையில் பெண்கள் வெட்டிக்கொண்டு போவார்கள், காயப்போட்டு பதநீர் அடுப்பில் போடுவார்கள், இந்தப் பூ மிதமான ஒரு ரம்மிய மணத்தோடு - வெள்ள வெளேரென்று- பொட்டல் காடுகளில் தேடுவாரற்று கிடக்கும். ரெட்டியார் கடை கிராமபூனகிராம் பெட்டி ஸ்பீக்கர் மாதிரி வெளியே பார்த்துக்கொண்டு இருக்கும். வயசுப் பொண்ணுக்கு காவல் மாதிரி செடி முழுக்க முள் இருக்கும்.

KæÜÜ uHÖ aQ ( T.D.T.A) பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிற நாட்களில் இந்தப் பூவை சிலேட்டுக் குச்சிபோடும் டப்பாக்களில் எங்களோடு படிக்கும் பெண் சிறுமிகள் போட்டு வைத்திருப்பதைப் பார்த்திருக்கிறேன். தகர டப்பா கொட்டடித்த சாமியாடும் "கோவாலு","திருவடி" இதை சாமிக்கு மாலையாக கோர்த்துப் போட்டிருப்பார்கள். காட்டுக்குப் புல் புடுங்க என் தங்கைகள் போகும் போது இதைப்பறித்து வந்து ஆசையோடு நூலில் கட்டுவதை பார்த்த என் தாய்- "வெளியே கொண்டு போடு சனியனே.சுடுகாட்டுப் பூ இது. பேய்க் கருப்பு இருக்கும்" என்று தலையில் குட்டுவதையும், வேண்டா வெறுப்பாக என் தங்கைகள் பாவாடையில் போட்டு தொடுத்துக் கொண்டிருந்ததை குப்பைக் குழியில் கொட்டுவதையும் பார்த்து ஒரு

www.padippakam.com



விழுமிய பேரிரக்கம் கொண்டு இந்த அல்ப பூவை பார்த்திருக்கிறேன்.

சொள்ளப்பேச்சி ''மவா'' பேச்சி மட்டும் எதையும் அசட்டை செய்யாமல் தொடுத்து தலையில் வைத்துக் கொள்வதை மனதால் ஒரு சபாசும் போட்டிருக்கிறேன். காட்டுபச்சேரி பண்டாரத்தி ஒருத்தி வீடு வீட்டுக்கு பூக்கொண்டு போடுவாள் - நெல் போடுவார்கள். வெறும் ''வெந்திப்பூ''தான் மணமே இல்லாத இந்தப் பூவைவிட கொரண்டிப்பூ எவ்வளவு ஓசத்தி என்பது என் தாயாருக்கு தெரியாமல் போனது- இந்தப் பூவின் துரதிருஷ்டமோ என எண்ணிய நேரம் உண்டு. பேச்சியையும் இந்தப் பூவையும் இன்னும் மறக்க முடியவில்லை.

3

தொழுவத்திலிருந்து மாடு அவிழ்த்து மந்தைக்கு அனுப்பும்போது சூரியன் மேலே வந்திருக்கும், எல்லா மாடுகளும், காலை பள்ளிக்கூடம் ஒண்ணுக்கு அடிக்கும் போது மேய்ச்சலுக்கு பத்திக்கொண்டு போவான் பழனி. இதைத்தான் ஊர்காலி மாடு என்பார்கள். பள்ளிக்கூடத்துக்கு சாக்குபோக்கு சொல்லிக்கொண்டு போக இந்த ஊர்க்காலி முக்கிய இடம் பெறும். மரியம்மா டீச்சர் துருவித்துருவி விசாரித்தாலும் - ''மாடுபத்தி போனேன் டீச்சர்'' என்போம், கல்லுளிமங்கன் எங்களிடம் பிச்சை வாங்க வேண்டும்.

பழனி ரெண்டாந்தாரமாக குருவம்மாளை கலியாணம் செய்து கொண்டு வந்தான். நிறைய பேருக்கு பொறாமையாக இருந்தது. ''நம்ம வீட்டில் கஞ்சி வாங்ற பய - அதுவும் ரெண்டாம்தாரமா - இப்படியொரு...'' என்று முனங்காத நடுக்கிழங்களில்லை. நாங்கள் கிராமத்து சிறுவர்களாயிருந்ததால் - குருவம்மாளின் சௌந்தர்யங்களைப் பற்றி தெரியாமல் போனது ஒன்றும் அதிசயமல்ல. பின்னால் நாங்கள் பெரிய பள்ளிக்கூடம் போன காலங்களில் கொஞ்சம் விவரம் தெரியவந்தபோது குருவம்மாளை அதிசயமாகப் பார்த்தோம்.

திடீரென்று யாருடனோ ஓடிப் போனாள். அப்போது அவளுக்கு ரெண்டுபிள்ளை. பிடித்து இழுத்துவந்து விசாரித்தார்கள். ஊர்க்காலி குருவம்மாவை பழனியோடு ஒன்று சேர்த்து வாழவைத்தார்கள். ஊரெல்லாம் அழுக்கு கிடக்க, ஊர்க்காலி குருவம்மாவை மட்டும் விசாரிப்பானேன்? இது முடிந்து சரியாக பத்தே நாளில் அவள் செத்துப்போனாள். சில மாதம் கழித்து பழனிக்கு கிறுக்குப் பிடித்து விலங்குடன் வீதிகளில் பாட்டுப்பாடிக்கொண்டு குருவம்மாளை நினைத்து ''என் ண்டிணியாட்டி'' என்றாள்.

எல்லோரும் 'தேவடியா ஓடிப் போனதால் பழனிக்கு பைத்தியம்

www.padippakam.com



பிடித்தது' என்றார்கள். பழனி வாயாலேயே புண்ணியவாட்டி என்று சொல்லும் குருவம்மா எவ்வளவு மேல் என்பதை எவனுக்குச் சொன்னா புரியும்? ஓ! அந்தச் சோகம்...

## 4

வேடநத்தம் சண்முக நாடார் கதை தெரியுமா? வேடநத்தம் பெரியபண்ணை மருமவா கஞ்சியை டப்புண்ணு கீழே வச்ச அண்ணையிலிருந்து -மருமவா கையினால சாப்பிட்டதில்லை - இதை என் தாத்தா சொல்வதைக் கேட்டிருக்கிறேன். "ஒன் வீட்டு அடப்பக் காரனுக்கு கஞ்சி வச்சமாதிரி வச்சிட்டு போறீயே" என்பார். கொட்டாரத்திலேதான் ஜாகை. என் தாத்தாவும் அவரும் சேக்காளிகள். கல்மடு பெரியாண்டியும் சேர்த்து நாலைந்து பேர் தினசரி அங்குதான் கூடுவார்கள். சரியான கடுக்கன்கள்.

எல்லா கிழடுகளுக்கும் மருமவ நடுங்கிச் சாவா. நாத்துக் கட்டுகள் படப்புக்கு காவல் இந்தக் கிழடுகள் தான். இதன் பெயர்தான் கொட்டாரம். கொட்டாரத்தில் வில்வண்டி கிடக்கும். இந்த வில் வண்டியில் (கிழடுகள்) சீட்டுக் கச்சேரி நடக்கும். நாங்கள் படப்புக்குள் ஒளிஞ்சு விளையாடு வோம். சிலவேளை இந்த படப்பு கொருக்காலிக்குள் கோழி முட்டை கிடக்கும். ஓட்டில் போட்டு பொரித்த தின்போம் வீட்டுக்குத்தெரியாமல். கோழி முட்டையைத் தேடி சில படப்புகளில் பூந்து வருவதுண்டு.

இப்படி ஒரு தடவை கோழி முட்டை திருடப் போனபோதுதான் கோடாங்கி மவா மூத்தவளும்- நல்லதம்பியும் காதல் செய்வதை கண்டுகொண்டோம். சத்தம் போட்டதில் கிழடுகள் அவளைப் பிடித்துக் கொண்டது. அவன் தப்பிவிட்டான். கிழடுகள் ஊரே சிரிக்கவைத்து வேடிக்கைப் பார்த்தது. நாங்கள் பயந்து போய் விட்டோம். நல்லத்தம்பி அண்ணாச்சிக்கு எங்கள் மேல் இருந்த கோவத்தை ஆத்த வெகு நாளாயிட்டு. அவளையும், அவ தங்கச்சியையும் சேர்த்து செவல்பட்டியில் கலியாணம் செய்து கொடுத்தார்கள்.ரெண்டாந்தாரம்.

சில ஆண்டுகள் கழித்து, எல்லாம் மறந்துபோன நாளில், செவல்பட்டிக்கு சேவல்கட்டு பார்க்கப் போனோம். வஸ்தாவி மோத்தாதான் எங்களைக் கூட்டிப் போனார், சேவல்கட்டு முடிந்து சாயாக்கடை போனபோது தெரியாமல் தம் அடித்தோம். அதே கோடாங்கி மவா எங்களை அடையாளம் கண்டு வீட்டுக்கு கூட்டிப்போய் கடுங்காப்பி, முறுக்கு கொடுத்தாள். எல்லாம் மறந்துவுட்டிருந்தது. எனக்கு மட்டும் அந்த சாந்தமான முகத்துக்கு முன் நன்றியும்- மரியாதை தந்ததை மறக்க முடியவில்லை...

www.padippakam.com

# சேலத்துக் கோட்டைகள்

தமிழ்நாடன்

### 1.கற்கால மக்கள் கோட்டை

சேலத்தவர்களின் கோட்டைக் கட்டுமானக் கலையின் முதற் சான்றுகளைப் பெருங்கற் காலத்துக் கல் கட்டிடம் மூலம் அறிய வருகிறோம். ஏற்காட்டு மலையில் 'பகோடா பாய்ன்ட்' என்றொரு இடம். உயர் 4507 அடி. அடியில் அகன்றும் மேலே செல்லச் செல்லக் குறுகலாயும் அடிக்கப்பட்ட பெருங் கற்காலத் துக் கல் கட்டுமானம் 'பகோடா' வடிவினதாகத் தோற்றமளித்ததால் அப்பெயர் பெற்றது. பின்னாளில் அதையே 'பிரமிய பாய்ன்ட்' என்றனர். வித்தியாச மாக அமைக்கப்பட்ட பெருங்கற் கால ஈமத் குழிகள் என்று தான் இவை கருதப்பட்டன. பட்டிய லிடப்பட்டன.



அண்மையில் இங்கிலாந்து ஆய்வாளர்கள் இருவர் தமது புதிய ஆய்வினைத் தெரிவித்தனர்: 'பகோடா பாய்ன்ட்' கட்டுமானம் மொழுக்கென்றிருக்கிற பாறை மீதுகட்டப்பட்டிருக்கிறது. நில வியல் இயற்கைச் சூழல்

www.padippakam.com



திறமையாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. கட்டுக்கற்கள் ஒழுங்கு செய்யப்பட்டனவாய்த் தோன்றுகின்றன. காவலர் நின்று கண்காணிக்கத்தக்க காவல் மதில் அமைப்புத் தென்படுகிறது. சுற்றுப் பகுதியில் கூரிய சரிவுகளுடைய இவ்விடத்திற்கு ஒரு திசையிலிருந்துதான் மேலேறி வர முடியும். ஆதலால் தற்காப்பில் கவனம் கொண்ட மக்கள் வெகு திறமையாக இதைக் கட்டியிருக்க வேண்டும். இன்றைக்கு 4000 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதாக இருக்கக் கூடும். இவற்றால் இது பெருங்கற்கால மக்கள் கட்டிய கற்கோட்டை எனக் கருதலாம். இதன்சமகாலத்துக் கோட்டை அமைப்புகளை இங்கிலாந்து டார்ட்மூரில் (Dartmoor) காணலாம். (Hugh and Colleen Gantzar, The Hindu (1.6.1990).

இங்கிலாந்தில் தொடங்கி தென்னிந்தியா வரை பெருங் கற்காலச் சின்னங்களை நிறையக் காணலாம். அந்த, நீண்ட நெடும் வரலாற்றுச் சங்கிலியில் ஓரிடம் தான் ஏற்காடு. புதுக் கற்காலக் கருவிகள் செய்யும் சிறந்த தொழிற் சாலையாக ஏற்காடு விளங்கிற்று. இத்தகவல்களையும் இணைத்துப் பார்க்கிற போது 'பகோடா பாய்ன்ட்' ஒரு கோட்டை வளாகம் என்னும் கருத்திற்கு உறுதி சேர்கிறது. காட்டுக் கோட்டை (ஆத்தூர்), கோட்டைக்ரடு( சேலம்), கோட்டைக் கவுண்டம் பட்டி, கோட்டை மேட்டுப்பட்டி, கோட்டை சோளப்பாடி, மரக் கோட்டை, கோட்டைப் பாளையம், கோட்ட வருதம் பட்டி, திருச்செங்கோடு ஆகிய ஊர்ப்பெயர்கள் சேலத்தில் ஒரு காலத்தில் அதிக எண்ணிக் கையில் கோட்டைகள் இருந் திருக்கும் வாய்ப்பை அறிவிக் கின்றன. ஒவ்வொரு பேரூரிலும் கோட்டை மேடு என்னும் மண் திட்டைக் காணமுடிகிறது. ஏற்காட்டில் ஓரிடத்தின் பெயர் 'அரண்மனைக் காடு', பாளையக் காரர்கள் தம் இல்லங்களைக் கோட்டைகளாக வேக் கட்டி னார்கள். பெரிய அளவினவை என்றாலும் பெரிதும் மண் கோட்டைகள், வெள்ளையர் சேலத்தைக் கைக் கொண்டவுடன் பாளைய அமைப்புகள் முற்றாக அழிக்கப் பட்டன. நாட்டவர்கள் துப்பாக்கி முனையில் நிராயுத பாணிகளாக்கப் பட்டனர். எதிர்த்து நின்ற, ஆதரவு தரமறுத்த பாளையங்கள் மண் ணோடு மண்ணாக்கப் பட்டன. உழுந்தும் உப்பும் இறைத்துக் கழுதைகளை விட்டு உழுது கோட்டைப் பரப்புப் பாலை யாக்கப்பட்டது. சேலத்தில் மண்தி டலாகக் காட்சிய ளிக்கும் பல கோட்டைகளின் கதைஇது தான்.

அமரகுந்தி, ஆத்தூர், ஆண்டிக் கரை, ஆறகளூர், ஓமலூர், காவேரிபுரம், காடையாம்பட்டி, சங்ககிரி, சாம்பள்ளி, சேலம், தம்மம்பட்டி, துத்திகுளம்,

www.padippakam.com



நங்கவள்ளி, நஞ்சையிடையாறு, நத்தமேடு, நாமக்கல், பரமத்தி, பொக்க1னேரி, பேளூர், மண் கொண்ட மலை, முதலைப்பட்டி, மேச்சேரி, மோரூர் ஆகிய ஊர் களில் கோட்டைகள் இருந்தன.

அரண் நால்வகை என்பார் வள்ளுவர் (குறள்: 742), நீர், நிலம் மலை, காடு இவை அரண்களை வலுப்படுத்தின. சேலம் மக்கள் இந்நால்வகை அரண்கள் கட்டுவ திலும் வல்லவராய் இருந்தனர். வசிட்ட, சரபங்கை நதிகளில் நீர்



அரண்கள் கட்டப்பட்டன. ஏற்காடு சங்கரிரி, நாமக்கல் மலைகளில் மலை அரண்கள் அமைக்கப் பட்டன. காவிரிபுரம் அரண் காட்டரணாம். கட்டுமானப் பொருள்களில் முக்கியமான கற்களுக்குச் சேலத்தில் பஞ்சம் இல்லை. காறைச் சாந்து சுண்ணாம்பு கலந்து தயாரிக்கப் பட்டது.

கோட்டை கட்டி வாழும் அளவு கெட்டிமுதலிகளும் மகதைவா னர்களும் பலமுள்ள, பெருமை மிக்க ஆட்சி நடத்தியவர்கள். கெட்டிமுதலிகளைக் கோட்டை முதலிகள் என்றும் அழைக்கலாம். அவர்கள் அமைத்ததும் ஆண்டது மான கோட்டைகள் அமரகுந்தி, ஆத்தூர், ஆறகளூர், ஓமலூர், காவேரிபுரம், சாம்பள்ளி, தாரமங்கலம், மேச்சேரி இப்படிப் பல. பெத்தநாயக்கன்பாளையம் மற்றும் பேளூர் கோட்டைகள் மைசூர் உடையார்கள் காலத்தவை.

### 2. ஆத்தூர்க் கோட்டை

ஆத்தூர்க் கோட்டை வசிட்ட நதிக்கரையின் வடபுறம் அமைந்துள்ளது. தென்தமிழ்நாடு வடகிழக்குத் தமிழ் நிலத்துடன் தொடர்புகொண்ட அந்த நாள் நெடுஞ்சாலையில் அமைந் துள்ளது இக்கோட்டை.

கெட்டிமுதலிகள் கட்டியதிது எனும் கதை வரலாறு ஆக்கப்பட்டுவிட்டது. என்றா லும், கோட்டைக்குள் இருக்கும் காய நிர்மலேசுவரர் ஆலயத்தில் காணப்பெறும் முதலாம் பராந்தகச் சோழனின் கல்வெட்டும் (கி.பி 10-ம் நூ), கிருஷ்ண தேவராயன் காலக் கல்வெட்டும் (16-ம் நூ) இத்தலத்தின் வரலாற்றுக்கு இன்னும் பழமை சேர்க்கின்றன. சேலம், கிழக்குப்பகுதியை ஆண்ட வர்கள் மகதைவானர்கள். ஆறக ளூர் கோட்டையைச் சிற்றரசன் வேணுவராயன் கட்டியிருக் கக்கூடும். செக்கிடிப்பட்டிக்

www.padippakam.com



கல்வெட்டு ஆத்தூர்க் கோட்டையைக் கட்டியவன் சேலம் சின்னம நாயக்கன் என்கிறது.

கெட்டி முதலிகளின் வீழ்ச்சிக்கு பிறகு ஆத்தூர் மைசூர் வசமாகிப் போயிற்று. பிறகு திப்புவின் கீழ் சில காலம். கும்பினி ஆட்சியர் சுமார் முப்பதாண்டு (1972,1824) ஆத்தூர்க் கோட்டையை ராணுவத் தளமாய்ப் பயன்படுத்தினர். அதன் பின் கோட்டையின் முக்கியத்துவம் குறைந்து, அது அழிந்து போயிற்று. கோட்டையில் 64 சதுர ஏக்கர் பரப்பினை மக்கள் முடிந்தவரை தம்மிச்சையாய்க் கையகப்படுத்தி ஒரு பக்கம் கிராமத்தையே உருவாக்கி விட்டனர். வயலாக மாற்றப் பட்டுவிட்ட ஒரு பகுதி மக்களின் தேவை வயிறா வரலாறா எனும் கேள்வியை உரத்துக் கூவுகிறது.

ஆத்தூர்க் கோட்டை நீர் அரண்கொண்ட நிலக்கோட்டை. கற்கோட்டை. பெருங் கருங்கற்பாறைகளைச் செதுக்கி அடுக்கி கோட்டைச்சுவர் அமைக்கப்பட்டிருக்கிறது. நான்கு நுழைவாயில்கள் இருந்தன. பிரதான வாயில் கிழக்கே இருந்தது. வசிட்ட நதி தெற்கே இயற்கை அரண். மற்ற மூன்று பக்கமும் கருங்கல் கரைகளோடு அகழிகள் அமைக்கப்பட்டிருந்தன. தெற்கு மதிலின் நடுவே கோடி மதில் இருந்தது. மேற்கேயும் ஒன்றிருந்ததாம். கோட்டைக்குள் அரசமாளிகை, உல்லாச மாடம், கச்சேரி, தானிய அல்லது ஆயுதக் கிடங்கு முதலான கட்டிடங்கள் இன்னும் பார்க்கத்தக்கனவாய் உள்ளன. ஆத்தூரில் கும்பினி ஆட்சிக்குச் சான்றாய்த் துயில்கிறது கர்னல் முர்ரேவின் கல்லறை. இக்கட்டிட அமைப்புகளை இந்தியத் தொல்லியல்துறை பாதுகாத்து வருகிறது. ஒரு பக்கம் ஆறும் மூன்று பக்கம் அகழிகளும் உடைய இந்தியக் கோட்டைகளில் ஆக்ராக் கோட்டை, தஞ்சைக் கோட்டை போல ஆத்தூர்க் கோட்டையும் சிறப்பானது என்பார் தங்க. க்ந்தசாமி (போரியல் அன்றும் இன்றும் (1980)).

### 3. ஓமலூர்க் கோட்டை

சரபங்க நதியில் ஓயாத வெள்ளம் ஓடிய காலத்தில் நல்லதோர் நீர் அரணாக விளங்கிற்று. ஓமலூர்க் கோட்டை நதியின் இரு கிளைகளுக்கிடையே அமைவதால் இது தீவுக் கோட்டையாம். தொப்பூர்க் கணவாய் வழியே வரும் வடக்குப் பகைவரை எதிர் கொள்ளும் காவற்கோட்டை இதுவாம்.

கோட்டையில் இரண்டு சுற்று வளைவு மதில்கள் இருந்தன. ஆறும் மொத்தம் பதினான்கு கொத்தளங்கள் இருந்தன. கொத்தளத்தின் மீது பீரங்கியை நிறுத்தும் ஏதம் உண்டு. கோட்டை சுமார் 25 ஏக்கர் பரப்பு.

[illegible]லிகளே ஓமலூர்க்

www.padippakam.com



கோட்டையை அமைத்தவர்கள் (16-ம் நூ).ஆனால் கோட்டைப் பகுதியில் பூமிக்குக் கீழே சங்ககாலம் சார்ந்த கருப்புச் சிவப்புப் பானை ஓடுகள் 'நாங்கள் இன்னும் பழைய ஆட்களாக்கும்' என்று முணுமுணுக்கின்றன. மைசூர் ஆட்சியின் போதும் ஓமலூர் வணிக மற்றும் ராணுவ மையமாய் விளங்கிற்று. கும்பினிக்கும் ஹைதருக்கும் நடைபெற்ற போரில் இருமுறை இக்கோட்டை கைமாறிற்று. மண்ணும் கல்லும் கலந்து கட்டப்பட்ட மண்



கோட்டை இது. சுட்ட செங்கற்கள் சிலவிடங்களில் மட்டும் தான்.

மைசூர் கண்டீரவ நரசராயன் (1641) காலம் தொடங்கி நூற்றைம்பது ஆண்டுகள் தொடர்ந்து தாக்குதலுக்கு ஆளாகி (1641, 1688, 1704,1768,1790) ஓமலூர்க் கோட்டை மண் குவியலாக மாறிப்போயிற்று.

**4. காவேரிபுரம் கோட்டை**

சேலம் மைசூர் எல்லையில் காவேரிபுரம் கணவாய் என்றொரு 30 மைல் அகலமுடைய மலைச்சந்து. இது கஜல் கட்டிக் கணவாய் எனவும் பெறும். கொங்கு - மைசூர் நாட்டு வணிகத்திற்கு இத தான் பாதை. மைசூர் மன்னன் கண்டீரவ நரசிம்மன் கொங்கு நாட்டின் மீது தனது படையைச் செலுத்தியது இவ் வழியாகத் தான் (கி.பி. 1641). இதனை அடைப்பதற்கு இரட்டைக் கதவு போல நிதி காவல், சிக்க காவல் என்றிரு கோட் டைகளைக் கெட்டிமுதலிகள் கட்டினர்.

**5. சங்ககிரிக் கோட்டை**

சங்கு வடிவத்தில் அமைந்துள்ள மலை சங்ககிரி (உயரம் 2345 அடி). மூன்று திசைகளிலும் செங்குத்தாய் மலை உயர, கிழக்குப் பக்கம் மட்டும் மேலேறத் தக்க வண்ணம் அமைந்திருக்கிறது. இயற்கைச் சூழலை முழுமையாகப் பயன்படுத்தி இம்மலை மீது ஒரு பெருங்கோட்டை கட்டப் பட்டிருக்கிறது.

சங்ககிரி மலை அரண். மலைக்கோட்டை, செப்பம் செய்யப்பட்ட மலைக்கற்கள், செங்கல், காறைக் கலைவைக் கட்டுமானம். ஒன்றைத் தொடர்ந்து ஒன்றாக பத்து மதில்கள் மலை மீது உயர்கின்றன. இதனைக் கோட்டைத் தொடர் என்பது பொருந்தும். இம்மதில்கள் ஒவ்வொன்றுக்கு மொரு பெயர். நுழைவாயில் பெயரே

www.padippakam.com



மதிலுக்கும். ஒவ்வொரு வாசல்(வாயில்) அமைப்பும் வெவ்வேறு. அமைந்துள்ள இடமும் உயரமும் வெவ்வேறு. அதன் பயன்பாடும் வெவ்வேறு. மலைகளின் கழுத்தில் புரளும் மணிவடம் போலவான இக்கோட் டைத்தொடர் வெவ்வேறு நபர்களால் வெவ்வேறு காலங் களில் கட்டப்பட்டிருக்கிறது. கோட்டையின் முதல் கட்டுமானம் புலிமுக வாசல். கண்ணி வேட்டுவன் என்னும் வேட்டுவர் தலைவன் அதைக் கட்டினான். அதன் பின் உச்சி உரைக்கும் கால வளர்ச்சிப்படிக் கட்டிக் கொண்டேப் போனார்கள் என்று சொல் வதிற்கில்லை. ஐந்தாம் வாசல் திப்பு கட்டியதாம். ஆறு, எழு, எட்டு, ஒன்பதாம் வாசல்கள் கும்பினியார் அமைத்தது. பத்தாம் வாசல் மைசூர் உடையார் பணியாம்.

ஒரு மதிலுக்கும் இன்னொன் றுக்கும் இடைவெளிகள் இருந்தன. அதைத் திப்புவும் கும்பினியாரும் இணைத்துக் கட்டினார்கள். கோட்டையில் முதல் வாசல் புலிமுக வாசல்.

நான்காவது வாசல் இரண மண்டல வாசல். இங்கிருந்துமலை அடிவாரம் வரையான பெரும் பகுதியைப் பாதுகாக்கலாம். துப்பாக்கி வெளியே தெரியாத வாறு மறைத்துக் கொண்டு, ஏறி வரும் எதிரிகளை வீழ்த்தலாம். ஐந்தாவது வாசல் புதுக்கோட்டை வாசல். இங்கே ஆறு கொத்தளங்கள் . கொத்தளங்கள் மீது பீரங்கிகள் நிறுத்தலாம். குதிரை மண்டபம் எனப்படும் கட்டிடம் ஆயுதச் சாலையாகலாம். பூவல் திட்டி வாசல் எனப்பெறும் ஏழாம் வாசலில் பெரிய உறுதியான வெடிமருந்துக் கிடங்கு உள்ளது. ஒன்பதாம் வாசல் வெள்ளைக் காரன் வாசல். பத்து மைசூர் வாசல். பத்தாம் வாசலுக்கு மேலே மூன்று கட்டிடங்கள். அவற்றுள் பெரிது கோட்டைத் தலைவனின் வசிப்பிடம். இன்னொன்று எண் ணெய்க் கிணறு. மூன்றாய்ப் பிரிக்கப்பட்டுள்ள இதில் நெய், விளக்கெண்ணெய், நல் லெண்ணெய் சேமிக்கப்பட் டதாம். அக்காலத்தில் தமிழ்நாட் டில் மிக உயரத்தில் அமைந்திருந்த நுகர் பொருள் பாதுகாப்பி டம்இதுவே.

கோட்டைக்குள் ஐந்து இந்துக் கோயில்களும் இரண்டு மசூதி களும் உள்ளன. கர்னல் ஓரம் இங்கே தங்கியிருந்தார்(1797). இரண்டாம் வாசலான திட்டிவாச லில் ஒரு நீர்க்குளமும் உள்ளது. மலை உச்சியில் இயற்கைச் சுனைகளும் செயற்கைக் குளங்க ளும் உள்ளன. ஒன்றின் பெயர் மான்சுனை. ஒரு காலத்தில் கோட்டைக்குளங்கள் சங்ககிரி நகருக்கே குடி நீர் வழங்கின.

சங்ககிரிக் கோட்டை அடைக் கலம் புகவும் எதிரிகளை அடைத்து அழிக்கவும்

www.padippakam.com



பயன்பட்டது. ஆளிறக்கும் குழி, உருட்டி விட்டான் பாறை, தோலுறிச்சான் மேடு எனும் இடப்பெயர்கள் கோட்டைக்குள் நடந்த கொடூரச் செயல்களுக்கு மவுன சாட்சிகள். ஒரு மதிலின் பெயரே ரண மண்டலம். நல்ல தற்காப்பு அமைப்பு கொண்ட அது எதிரிகள் சித்ரவதைக்கு ஆளாக்கப்படும் இடமாகலாம். அதனால் அப் பெயர். முழுவதும் ராணுவத் தேவைக்கென அமைந்த கோட்டை இது.

குன்னத்தூர் (குன்றத்தூர்) என



வழங்கிய காலம் முதலே ஆட்சித் தலைமையிடமாக விளங்கிய சங்ககிரி ஒரு தலைநகரமாக இருந்திருந்தால், அதன் கோட்டை இன்னும் சிறப்பான பணி ஆற்றியிருக்கும்.

**6.சேலம் கோட்டை**

சேலம் நகரிலொரு பெரிய கோட்டை இருந்தது என்பதை இன்று நம்புவது சிரமம். நகரவை, பாரதவங்கி இவற்றுக்குத் தெற்கேயும் லண்டன் மிஷன் பள்ளி, சர்க்சுக்குள் கிழக்கேயும் திருமணி முத்தாற்றங்கரை வரைப் பரந்து விளங்கிய கோட்டை அது. கிழக்கிலும் தெற்கிலும் ஆறே அரணாய் விளங்க வடக்கிலும் மேற்கிலும் ஆற்று நீர் ஏறும் அகழிகள் வெட்டப்பட்டிருந்தன. ஆற்றோரம் இரண்டு மதில் சுற்றுகள் இருந்தன. குண்டு போட்டான் தெரு, அங்கொரு பீரங்கி மேடை இருந்ததை அறிவிக்கிறது. சேலம் கோட்டையைக் கட்டியது சேலம் பாளையக்காரர்கள்( 16,17-ம் நூ) என்பர். கோட்டைக்குள் இருக்கும் சௌந்திரராஜ அழகிரிநாதப் பெருமாள் கோயில் 13-ம் நூ) அங்குள்ள துர்க்கை பாண்டியர் பாணியிலும் கோயிலுக்குரிய தாயிருந்தது. ஆற்றிலிருந்து எடுக்கப்பட்ட (1987) திருமால் விஜயநகர் பாணியிலும் அமைந்துள்ளனர். ஆதலால் கோட்டையா கோயிலா எது முதல் எனும் சிக்கல் இங்கும் எழுகிறது. 18-ம் நூற்றாண்டில் ஹைதர் கும்பினிப் படைகளுக்கு இடையே சிக்கித் தவித்த கோட்டைகளில் இதுவும் ஒன்று. பாதுகாப்பு அமைப்புகள் இதில் குறைவே. ஆதலால் இது ராணுவ முக்கியத்துவம் பெற வில்லை. ஹைதர் அலியின் ஹவில்தார் இஸ்மாயில் கானுக்கும் கும்பினித் தளபதி கேப்டன் எய்னிக்கும் அலுவல் தலைமையிடமாக விளங்கிற்று சேலம் கோட்டை.

**7.நாமக்கல் கோட்டை**

இரு நூறு அடி உயரமான

www.padippakam.com



ஒற்றைக் கல் குன்றின் மீது கட்டப்பட்டிருக்கிறது நாமக்கல் கோட்டை. நாமக்கல் மலை. அரண். கருங்கல், செங்கல் மற்றும் காறைக்கலவை கட்டுமானப் பொருட்கள். கோட்டை பரப்பின் மீதுகாவலர் கண்காணிப்பு நிலைக ளும் பீரங்கி நிறுத்துமிடங்களும் உள்ளன. சங்ககிரிக் கோட்டையின் ரணமண்டல வாசலில் உள்ளது போல தற்காப்பாய் ஒளிந்து கொண்டு அதே நேரம் பல கோணங்களில் துப்பாக்கியைத் திருப்பிச் சுடத் தோதான புழைகள் பல உள்ளன. பெரியதொரு தானியங்கிடங்கும் வலிமை யானதொரு வெடி மருந்துக் கிடங்கும் அமைக்கப் பட்டுள்ளன.

சேந்தமங்கலம் பாளையக் காரன் இராமச்சந்திர நாயக்கன் (17-ம் நூ) நாமக்கல் கோட்டையைக் கட்டினான். இதற்கும் முன் என் போர் கோட்டைக்குள் இருக்கும் திருமால் கோயில் கல்வெட்டைச் (சடையவர்மன் சுந்தரபாண்டியன் 13-ம் நூ) சான்று வைப்பர். பின் என்போர், நுழைவாயிலில் காணப்பெறும் மைசூர் உடையார் அரசு இலச்சினையான (18-ம் நூ) சிங்கத்தை முன் நிறுத்துவர். நாமக்கல் பெருங்குன்றையும் நீர் ததும்பும் கமலாலயத்தையும் கோட்டையையும் ஒரு சேரப் பார்த்தால் கம்பீரமும் அழகும் விளங்கப்பெரிதாகத்தோன்றும்.

எனினும் குன்றின் மேல் கோட்டையின் உட்பரப்பு சுமார் 1.5 ஏக்கர் அளவினதே. இதன் ராணுவப்பயன் சிறிது. தென்தமிழ கத்திற்குள் வடக்கிலிருந்த பாயும் நேர்ச்சாலையில் வரும்பகை வெள்ளத்தைக் கண்காணிக்கும் மேடையாகவும் தானியக் கிடங் காவும் 18-ம் நூற்றாண்டு முழுவ தும் பயன்பட்டது இக்கோட்டை.

**8. பேளூர்க் கோட்டை**

17-ம் நூற்றாண்டு மையம் சேலம் பாளையக்காரன் லட்சுமண நாயக்கன் வசிட்ட நதிக்கரையில் பேளூரில் ஓர் 'அரமணை' கட்டி னான். மேலும் தடாகங்க ளும் சமுத்திரங்களும் உண்டு பண்ணி னான். பேளூரின் உண் மைப் பெயர் வெளியூர். ஆத்தூர்க் கோட் டையையும் இவர் தான்கட்டினார் என்கிறது பேளூர் செக்கடிப்பட்டிக் கல்வெட்டு. பழுதுபார்த்தது மட் டும் அவர் செய்த பணி என்று கல்வெட்டினை மறுப்பர் சிலர். பேளூர்க் கோட்டை மண் கோட் டை. இப்போது கோட்டை மேடு என மண் திட்டாய் மட்டமாகிக் கிடக்கிறது.

பேளூர் லஷ்மணனின் மூத்த சகோதரன் பெத்தநாயக்கன். அவன் அமைத்த பாளையம் அவனது பெயரால் வழங்கிற்று. அதுவே அவனது தலைநகர். அங்கே அரண்மனையும் கோட்டையும் இருந்தனவாம்.

**நன்றி:**

**சேலம் - கலையும் இலக்கியமும்.**


www.padippakam.com



# தனக்குத் தானே பேசினான்

## கலீல் கிப்ரான்

என் அன்பே! எங்கே இருக்கின்றாய்?
நந்தவனத்திலே பூச்செடிகளுக்கு நீர் ஊற்றுகிறாயா?
தாயின் தனத்தைக் காதலிக்கும் குழந்தையாக
உன் தனி அறையில், கள்ளமற்ற, பாவமின்மைக்கு
பலிபீடம் காட்டி, என் இதயத்தையும் உணர்வையும்



பலியிட்டு தியாகம் செய்தாயா?
மனிதனின் ஞானத்தைப் புத்தகங்களிலே
படித்து, தெரிந்து, புரிந்து அறுவடை செய்கிறாயா?
கடவுளின் பேரறிவைப் புரிந்து கொண்ட
செல்வச் செழிப்புடையவளே! என் அன்பே!

படிப்பகம்

www.padippakam.com

□

நீ எங்கே? என் உணர்ச்சியின் துணையே, நட்பே!
நீ தெய்வ சன்னதியிலே எனக்காக துதிக்கின்றாய்?
சமவெளியிலே இயற்கையைக் கூவி அழைக்கின்றாயா?
என் கனவிலும் ஆச்சரியத்திலும் வாழும் சொர்க்கமே!
ஏழை எளியோரின் இல்லத்திலே அவரின்
உடைந்த உள்ளத்திற்கு ஆறுதல், தேறுதல் கூறி,
உன் இனிமையான சொற்களால் மகிழ்வித்து,
அவர்களின் கைநிறைய வெகுமதி அளிக்கின்றாயா?

□

நீ எங்கும் இருப்பாய்! கடவுளின் ஆத்மா நீ!
நீ எல்லா காலத்தும் வாழ்வாய்!
நீ காலத்தைவிட வலியவள்! உயர்ந்தவள்!

□

நாம் ஒன்றான, ஐக்கியமான இரவை எண்ணிப்பார்!
உன் உள்ளுணர்வின் ஒளிநம்மைச் சுற்றிய பெரும் ஜோதி!
காதல் தேவதைகள் நம் மேல் வட்டமிட்டு பறந்தனர்!
உணர்ச்சி வசமாகி பண்பாடி காதல்மொழி பேசினர்!


படிப்பகம்

www.padippakam.com



☐

நாம் இருவரும், மரக்கிளைகள் கவிழ்ந்து மறைந்திருக்க
உட்கார்ந்து மகிழ்ந்த, சுகித்த நாட்களை நினைத்துப்பார்!
இதயத்தின் புனித இரகசியத்தை
மார்பு எலும்பு மறைப்பது போல்,
நம்மை மனிதர்களின் பார்வையிலிருந்து மறைத்திருந்ததே!
பாதைகளையும், நடந்து சென்ற மலைச்சரிவுகளையும்,



நாம் இணைந்த கைவிரல்கள் பிணைய, ஒருவர் தலை மேல்
மற்றொருவர் தலை சாய்த்து இருவரும் புகழடைந்து,
ஒருவரில் ஒருவர் நம்மையே மறைத்துக் கொண்டோமே!
நான் உனக்கு பிரியாவிடை கொடுத்த நேரத்தை நினை!
நீ என்னை ஆரத்தழுவி அன்புமுத்தம் -மேரிமுத்தம் தந்தாய்!
எங்கே உதடுகள் அணைக்கின்றதோ அங்கே,

படிப்பகம்

www.padippakam.com



தெய்வீக இரகசியங்கள் பேசப்படுவதை, நாவால்
அறிய முடியவில்லை என்பதை கற்றுக்கொண்டேன்!

□

அந்தமுத்தம், அழுகைக்கு முன்னோடி;
எல்லாம் வல்ல இறைவன் களிமண்ணிலே மூச்சுவிட்டு,
இந்த மனிதனை உண்டாக்கினான் அந்த மூச்சின் முன்னால்
நமக்கு முன்னே - ஆவி உலகிற்கு - நம் அழுகையே
நம் இரு ஆத்மாக்களின் புகழ்பாடி விளம்பரம் செய்கிறது!
அங்கே அது நாம் முடிவின்மையிலே
ஒன்றாகும் வரை காத்திருக்குமா?

□

மறுபடியும் என்னை நீ அணைத்து முத்தமிட்டாயா?
உன் கண்களில் கண்ணீர் வழிந்தோடி வரவில்லையா?
"பூமியில் உள்ள உடல்களின் ஆசை யாருக்கும் தெரியாது!
உலகத்திற்காக அவை அடிக்கடி பிரியவேண்டி உள்ளது!
உலக காரணங்களுக்காக தனித்தனியே இருக்கவேண்டும்
என்பது உலக உண்மையில்லையா?
காதலின் கரங்களில் எல்லா உணர்வுகளும்
பத்திரமாக இருக்கும்!
மரணம் வந்து அவர்களை கடவுளிடம் சேர்க்கும் வரை
என் ஆருயிரே! நீ போ! கீழ்படிந்து போ!

□


வாழ்க்கை உன்னை அதன் பிரதிநிதியாக்கி உள்ளது!
அவள் ஓர் அமைதி தவழும் மங்கை! அவள் கீழ்படி பவர்க்கு,
சொர்க்கத்தின் இன்ப தேக்கத்திலிருந்து, முழுமையான

www.padippakam.com



மகிழ்ச்சியைப் பருகிட வாரிக் கொடுப்பவள்!
எனக்கு உன் காதல் ஒரு பணிப்பெண்ணை, தோழியைக்
கொடுத்து, உன் நினைவு அழிவற்ற திருமணத்தை அளித்தது.
□

என் இன்னுயிர் தோழியே! எங்கே இருக்கின்றாய்?
நீ நிசப்தமற்ற நடு இரவிலே விழித்திருக்கிறாயா/
என் உள்ளத்தின் உணர்வுகளையும் இதயத்துடிப்பையும்!



ஏந்தி வரும் தென்றல் காற்றுக்காக காத்திருக்கிறாயா/
நீ உன் இளங்காதலின் படத்தைப்பார்க்கிறாயா?
அந்தப்படம் என் உருவப்பிரதியாக இருக்காதே!
நேற்று உன்முன்னே மகிழ்ந்து மலர்ந்த அம்முகத்திலே

படிப்பகம்

www.padippakam.com



துக்கம் தன் நிழலைப் பூசி கலைத்து விட்டதே!
உன் அழகால், அழகேறிய கண்கள் அழுது வறண்டதே!
உன் முத்தத்தால் நனைந்த வாய், துயரத்தால் உவர்ந்து போனதே!
□

என் அன்பே! எங்கிருக்கின்றாய்? கடல்களைத்தாண்டி
வரும் என் அழுகையொலியை, கூவுதலை கேட்கிறாயா?
என் பலமின்மையையும் இழிவையும் தாழ்வையும் பார்!
என் பொறுமையும் சகிப்புத்தன்மையும் தெரியுமா?
இறப்போரின் கடைசி மூச்சை
வானவெளியில் ஏந்தி வரவில்லையா?
நோயுற்ற காதலரின் குற்றச்சாட்டை எடுத்துவர
ஆத்மாக்களிடையே மறைத்து வைத்த தந்திகளில்லையா!
என் அன்பே! எங்கே நீ, இருள் என்ன சூழ்கிறது!
துக்கமும் துயரமும் வெற்றிபெற்றுவிட்டது!
எங்கே நீ சிரி! அக்காற்று எனக்கு புத்துயிர் அளிக்கும்!
□
வாயுமண்டலத்தில் நீ மூச்சு விடு! அது என்னை வாழ்விக்கும்!
என் உயிருக்கு உயிரே! நீ எங்கே இருக்கின்றாய்?
ஆ! காதல் எவ்வளவு கம்பீரமானது! வலிமையானது!
அக்காதல் என்னை எப்படி குறுக்கி சுருக்கிவிட்டது!

தமிழில்: ஆ.மா. சகதீசன்

www.padippakam.com

உன் இறுதி வார்த்தை விழுந்த பள்ளத்தில்
நான் நின்றிருக்கிறேன்
நிகழ்வுக் கென்னை மறுத்து கடந்ததையும்
தாண்டிப் போகிறது விரைவு நடை.
உடையின் நிறம் அசைந்து
அடையாளமாகிறது ஜனங்களுக்கிடையில்
என் நம்பிக்கையின் நிறம்.
இந்தத் தெருவின் முனைவரையிலும்
உனக்கு வாய்ப்பிருக்கிறது,
ஒரு தடவை திரும்பிப் பார்ப்பதற்கு.
தெரு நீளத்தில் சிறுத்த நிறம்
இதை விடவும் அற்புதமான சூழல்
உனக்கு
ஒரு போதும் வாய்க்கப் போவதில்லை,
தலை திருப்புவதற்கு.
தெரு முனையில் திரும்பிய பின் நீ
தொலை தூரப் பிரதேசத்திற்கு
இரண்டு டிக்கட்டுகள்
பதிவு செய்துவிட்டுக் காத்திருக்கலாம்,
விடுதியொன்றில்
இரண்டு குவளை தேனீருக்கு
ஆர்டர் கொடுத்துவிட்டு
இரண்டில் ஒரு சிகரெட்டை
புகைத்தபடி காத்திருக்கலாம்
குழிந்துகொண்டே போகும் இந்தப்
பள்ளத்திலிருந்து
எதுவும் தெரியப் போவதில்லை
எப்போதும் எனக்கு

-யூமா.வாஸுகி

www.padippakam.com

# திருப்பூர் தமிழ்ச் சங்கம்

## *இலக்கியப் பரிசுகள் - '95*

- 1995ல் வெளிவந்த சிறந்த நூல்களுக்கானப் பரிசு:

நாவல், சிறுகதை, கவிதை, மொழிப்பெயர்ப்பு, நாடகம், கட்டுரை, சிறுவர் இலக்கியம் ஆகியப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் மூன்று பரிசுகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| முதல் பரிசு: | ரூ. 3000/- |
| இரண்டாம் பரிசு: | ரூ. 2000/- |
| மூன்றாம் பரிசு: | ரூ. 1000/- |

- ஒவ்வொரு நூலிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்.

- அனுப்பக் கடைசி நாள்:

30.4.1996.

முகவரி:

34,கே.பி.என். காலனி,

3-வது வீதி,

திருப்பூர்- 641 601

- டாக்டர். ஆ.முருகநாதன்

தலைவர்.

படிப்பகம்

www.padippakam.com

Regd.No. M/9140 THAMARAI
WPP NO.TN/MS(N) 935 Regd. As News Paper in Srilanka



முன் அட்டையிலுள்ள முகமற்ற மன்னர் ஓவியம் ஆதிமூலம் வரைந்தது... புகழ்பெற்ற அவருடைய காந்தி ஓவிய வரிசையைத்தொடர்ந்து முகமற்ற மன்னர்கள் வரிசை வெளியானது.

''வெள்ளையர்களின் ஆட்சியை ஏற்று அவர்களுக்கு கப்பங்கட்டிக் கொண்டு அதிகாரங்கள் ஏதுவுமில்லாமல் பொம்மை அரசர்களாக சமஸ்தானத்து ராஜாக்கள் இருந்தார்கள்...

பிரிட்டிஷ் புகைப்படக் கலைஞர்களின் புகைப்படங்களில் இடம் பெற்றிருந்த இந்த அரசர்களின் படங்கள்தான் இந்த ஓவியங்களின் தூண்டுதலாக இருந்தன. இந்த ஓவியங்களுக்கு உடையும் வாளும் மட்டுமே அடையாளங்களாகவும், முகங்கள் அவசியமற்றதாகவும் உணர்ந்தேன். அவர்கள் மேல் அனுதாபங்கூடத் தோன்றியது... என்கிறார் ஆதி.

படிப்பகம்